விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு — Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 ஐப்பசி 18 வியாழக்கிழமை (04.11.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 320

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# பயங்கரவாத தடைச்சட்டம் முற்றாக நீக்கப்பட வேண்டும்



## கர்தினால் வண.மல்கம் ரஞ்சித் ஆண்டகை வேண்டுகோள்

(கொழும்பு)

நாட்டில் தற்போதுள்ள அவசரகாலச்சட்டம் மற்றும் பயங்கரவாத தடைச்சட்டம் ஆகியவற்றை நீக்க வேண்டும் என கர்தினால் வண.மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் நேற்றைய அமர்வில் சாட்சியமளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (16ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்ச்செல்வனுக்கு சிலை அமைக்க உலக நாடுகள் அனுமதிக்கக் கூடாது

### 'லக்பிம' வேண்டுகோள்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கு சிலை அமைப்பதனை உலகநாடுகள் அனுமதிக்கக் கூடாதென லக்பிம பத்திரிகை ஆசிரியர் தலையங்கத்தில் வலியுறுத்தியுள்ளது.

அமெரிக்க இரட்டைக் கோபுரத் தாக்குதல்களை மேற்கொண்ட அல்கொய்தா தீவிரவாதிகளுக்கு சிலை வைப்பதனை உலக நாடுகள் ஏற்றுக் கொள்ளுமா என கேள்வி எழுப்பப் பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் தமது சிரேஷ்ட தலைவர் ஒருவரை நினைவு கூருவதற்காக மேற்கொள்ளும் (16ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க்கட்சிகளின் அரங்கம் இரா.சம்பந்தனுடன் சந்திப்பு

(கொழும்பு)

தமிழ்க் கட்சிகளின் அரங்கப் பிரதிநிதிகளுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கு இடையிலான சந்திப்பொன்று நேற்று மாலை கொழும்பில் இடம் பெற்றது.


இச் சந்திப்பின்போது தமிழ்க் கட்சிகளின் அரங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த காலம், நேரம் இடம் ஆகியவற்றை ஒதுக்கித் தருமாறு கடந்த ஜூன் மாதம் அனுப்பிய கடிதத்தின் பிரதியை தமிழ்க் கட்சிகளின் அரங்க பிரதிநிதிகள் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தனிடம் கையளித்தனர்.

அத்துடன் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் தமிழ் தேசிய கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளுடனும் நாடாளுமன்ற குழுவுடனும் கலந்துரையாடிய பின்னர் அறிவிப்பதாக இரா.சம்பந்தன் குறிப்பிட்டுள்ளார்.

இச் (16ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்மக்களின் தீர்வுத்திட்டத்தை செயற்படுத்த இந்தியா உதவ வேண்டும்

### இரா.சம்பந்தன் வலியுறுத்தல்



(கொழும்பு)

தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து தமிழ் மக்களுக்கான தீர்வுத்திட்டத்தை முன்வைக்கும் போது அது தொடர்பில் இலங்கை அரசுக்கு இந்தியா அழுத்தங்களை கொடுக்க வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கூறினார்.

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அசோக் கே.காந்தாவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கிய தலைவர்கள் நேற்றுச் சந்தித்து கலந்துரையாடினர்.

இச்சந்திப்பின்போது தமிழ் மக்களின் மீள்குடியேற்றம், புனர்வாழ்வு நடவடிக்கைகள், பொதுச்சேவை வசதிகள் தொடர்பாக விரிவாக கலந்துரையாடியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, தமிழ்க்கட்சிகள் அனைத்தும் ஒன்று (16ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகாவின் வழக்கு 10ஆம் திகதி விசாரணைக்கு

(கொழும்பு)

தன்னை நாடாளுமன்றத்திற்குச் செல்ல அனுமதியளிக்குமாறு கோரிய இடைக்காலத் தடையுத்தரவு ஒன்றை விடுக்குமாறு சரத் பொன்சேகா தாக்கல் செய்திருந்த மனுவின் மீதான விசாரணை எதிர்வரும் 10ஆம் திகதி வரை தள்ளி வைக்கப்பட்டுள்ளதாக நீதிமன்றம் நேற்று அறிவித் (16ஆம் பக்கம் பார்க்க)

## தே.சு.முன்னணியின் கிளை தீக்கிரை

(மட்டக்களப்பு)

அமைச்சர் விமல் வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணியின் ஏறாவூர் கிளைக் காரியாலயம் தீக்கிரையாக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட ஏறாவூர் பொலிஸ்பிரிவுக்குட்பட்ட புன்னைக்குடா வீதியிலுள்ள இக்காரியாலயம் நேற்று மதியம் 1.45 மணியளவில் (16ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர்களின் பிரச்சினைகளை ஆராய்ந்து ஜனாதிபதிக்கு மகஜர் கையளிக்கப்படும்

### தமிழ்க் கட்சிகளின் அரங்கம் கூடி ஆராய்வு

(கொழும்பு)

தமிழ்க் கட்சிகளின் அரங்கம் நேற்றையதினம் கொழும்பில் ஒன்று கூடி முக்கியமான விடயங்கள் குறித்து கலந்துரையாடியதுடன் அது தொடர்பாக ஜனாதிபதியிடம் மகஜர் ஒன்றை கையளிப்பதற்கும் முடிபெடுக்கப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை 10.30 மணியளவில் கொழும்பிலுள்ள ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் அலுவலகத்தில் ஒன்று கூடி ஆராய்ந்ததாக அதன் செயலாளர் எம்.கே.சிவாஜிலிங்கம் வலம்புரிக்குத் தெரிவித்தார்.

இக் கூட்டத்தின் போது வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் எதிர்நோக்குகின்ற அன்றாடப் பிரச்சினைகள் குறித்து ஆராயப்பட்டு அது தொடர்



பாக சில தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறப்பட்டுள்ளது.

இவ் அரங்கத்தில் தமிழ்த் தேசியக் கூட்டணி, தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, ஈழ ஏதிலிகள் மறுவாழ்வுக் கட்சி, ரெலோ அமைப்பு, ஈ.பி.ஆர்.எல். எப்., ஜன (16ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை ஆயர் நேற்றுச் சாட்சியம்

(கொழும்பு)

யாழ்.அல்லைப்பிட்டி அருட்தந்தை ஜிம் பிரவுண் மற்றும் முல்லைத்தீவு அருட்தந்தை ஜோசப் பிரான்சிஸ் அடங்கலாக பலர் காணாமல் போயுள்ளனர்.

இதில் சிலபதிவுசெய்யப்பட்டவை. அதிகமானவை பதிவு செய்யப்படாதவையாகும் என திருகோணமலை (16ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலை மாணவர்களின் பிணை குறித்து ஆராய்வு

(கொழும்பு)

பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ள பல்கலைக்கழக மாணவர்கள் 21 பேருக்கும் பிணை வழங்குவது தொடர்பாக கொழும்பு மேல் நீதிமன்றம் நவம்பர் மாதம் 8 ஆம் திகதி திங்கட்கிழமை தீர்மானிக்கவுள்ளது.

கடந்த ஒக்டோபர் 14 ஆம் திகதி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சொத்துக்களுக்கு (16ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# விண்ணப்பம் கோரல்

**உதவிப் பணிப்பாளர்**

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் உதவிப் பணிப்பாளர் (சட்டத்துறை) பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கான உரிய தகைமையை பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

சகல விண்ணப்பப் படிவங்களையும் பணிப்பாளர் தலைமை அதிகாரி, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு அலுவலகம் இல. 36, மல்லசேகர மாவத்தை, கொழும்பு 7. என்ற முகவரிக்கு

26.11.2010 இற்கு முன்பாக பதிவுத் தபாலில் அனுப்பிவைக்க வேண்டும். இதுதொடர்பான மேலதிக விபரங்களை இன்று வெளியாகும் வர்த்தமானிப் பத்திரிகையை இன்று முதல் வலம்புரிக் காரியாலயத்தில் பார்வையிட முடியும்.

**வினைத்திறன்காண் தடைப்பரீட்சை**

இளைஞர் அலுவல்கள் அமைச்சின் முயற்சிகள் அபிவிருத்திப் பிரிவின் தொழில் முயற்சி அபிவிருத்தி மற்றும் பயிற்சி அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் கொழும்பில் நடத்தப்படும்.

பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்களை பதிவுத் தபால் மூலம் 06.12.2010 இற்கு முன்னர் பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, பெலவத்தை, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

(மேலதிக விபரங்களை இன்று முதல் வலம்புரி அலுவலகத்தில் பார்வையிட முடியும்.

# முல்லைத்தீவு மாவட்ட பட்டதாரிகளுக்கு

(யாழ்ப்பாணம்)

முல்லை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளுக்கான அவசர கலந்துரையாடல் எதிர்வரும் 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு ஒட்டிசுட்டான் மகாவித்தியாலயத்தில் இடம்பெறும்.

இதில் புதிய நிர்வாகிகள் தெரிவும் வேலையற்ற பட்டதாரிகளை பதிவு செய்தலும் இடம்பெறவுள்ளதால் அனைத்து வேலையற்ற பட்டதாரிகளையும் தங்கள் கல்விச் சான்றிதழ்களுடன் தவறாது சமுகமளிக்குமாறு (முல்லைத்தீவு வேலையற்ற பட்டதாரிகள் சங்க) செயலாளர் எஸ்.பிரதீபன் அறிவித்துள்ளார். (ச)

# உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

பொன் அணிகள் என அழைக்கப்படும் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணியும் யாழ்ப்பாணக் கல்லூரி அணியும் மோதும் உதைபந்தாட்டப்போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. (ச-7)

# குருபூசை தின நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள அனுசரணையுடன் அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம் நடத்தும் மெய்கண்ட தேவர் குருபூஜைநாளை மறுதினம் மாலை 4.00 மணிக்கு நீர்வேலி காமாட்சி அம்பாள் அறநெறிப் பாடசாலையில் இந்துசமய அபிவிருத்தி உதவியாளர் த.பிரதீஸ்வரன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி அதிபர் இ.குகநாதனும் சிறப்பு விருந்தினராக அச்சுவேலி தேசிய சேமிப்பு வங்கியின் முகாமையாளர் சி.நந்தகுமாரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ச-7)

# தமிழ் கைதிகள் மீது தாக்குதல்

கொழும்பு புதுக்கடை 8 ஆம் இலக்க நீதிமன்றத்தில் வைத்து தமிழ் அரசியல் கைதிகள் அங்கிருந்த சிங்கள கைதிகளினால் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளனர்.

கொழும்பு நியூ மகசின் சிறைச்சாலையில் இருந்து 9 தமிழ் அரசியல் கைதிகளும் மற்றும் விளக்க மறியல் சிறைச்சாலையிலிருந்து 40 தமிழ் அரசியல் கைதிகளும் தடுத்து வைப்பு கால நீடிப்புக்காக நேற்று காலை கொழும்பு புதுக்கடை 8 ஆம் இலக்க நீதிமன்றத்துக்கு கொண்டு வரப்பட்டு ஒரு அறையில் தங்கவைக்கப் பட்டிருந்தனர். அப்போது அங்கிருந்த சிங்கள கைதிகள் தமிழ் கைதிகளைப் பார்த்து புலி ஆதரவாளர்களா நீங்கள் என்று கூறிக்கொண்டு கடுமையான முறையில் தாக்கியுள்ளனர். (ச-5)

# இறுதிப் போட்டி

யாழ்.மாவட்ட துடுப்பாட்ட சங்கத்தின் 17 வயதுப் பிரிவுக்கான இறுதிப் போட்டி இன்று காலை 9.00 மணியளவில் யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இப்போட்டியில் சென்.பற்றிக்ஸ் கல்லூரியை எதிர்த்து ஹாட்லிக் கல்லூரி அணி மோதவுள்ளது (ச-7)







**தனியார் நிறுவனங்களை பதிவு செய்தல்**

பெறுமதி மிக்க உங்கள் வியாபார நிறுவனத்துக்கான கௌரவத்தையும் நம்பிக்கையையும் பெற்றுக் கொள்வதற்காக உங்கள் தனியார் நிறுவனங்களை இலகுவான முறையில் பதிவு செய்து கொள்ள நாடுங்கள்,

**VTL MANAGMENT**
Daanston House
Colombo -03
T.P. 072 9994777


# பழைய மாணவர் சங்க விசேட பொதுக்கூட்டம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மத்திய கல்லூரியின் பழைய மாணர் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

இக் கூட்டத்திற்கு நாடெங்கிலுமுள்ள கல்லூரியின் சகல பழைய மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு சங்கச் செயலாளர் சு.லோகேஸ்வரன் அறிவித்துள்ளார். (ச)


**அனைத்திற்கும் ஒரே தீர்வு**

உங்கள் முகம் பிரகாசமாக,
முகப்பருக்கள் நீங்க,
சருமம் பளபளப்பாக,
கண்களில் கருவளையம் நீங்க,
கால்கள் அழகுபெற,
தலை முடி வளர,
அனைத்திற்கும் ஒரே தீர்வு!
(மகளிருக்கு மட்டும்)
உங்கள் இயற்கை அழகை
மென்மேலும் மெருகூட்டிட...
அழையுங்கள் : 0779874761
(சி-1544)


# தேவை

தயவுசெய்து அறியத்தருவது: 33 வயதுடையநபரொருவருக்கு இரண்டு கிட்னியும் பழுதடைந்திருப்பதால் அவருக்கு உடனடியாக கிட்னி தேவையாக இருக்கிறது. 45 வயதுக்கு உட்பட்டவர்கள் யாரேனும் கிட்னி தரவிரும்பினால் கீழ்க்கண்ட தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

நன்றி

T.P. No : 021 321 5942, 0776184371, 0774749045

(சி-1532)

# கோட்டக்கல்வி அலுவலகங்களை வலுப்படுத்தல் செயலமர்வு

## திங்களன்று வவுனியாவில்

(திருகோணமலை)

வடக்கு மாகாண கோட்டக் கல்வி அலுவலகங்களை வலுப்படுத்தல் செயலமர்வு எதிர்வரும் 8 ஆம் திகதி திங்கட்கிழமை வவுனியாவிலுள்ள வடக்கு மாகாண முதல்நிலை அலுவலகத்தில் (வவுனியா தெற்கு வலயக்கல்வி அலுவலகம்) நடைபெறவுள்ளது.

எனவே வடக்கு மாகாண சகல கோட்டக் கல்விப் பணிப்பாளர்களையும் கணனியில் காட்சிப்படுத்தற்குரிய செயற்றிட்ட அறிக்கைகளுடன் செயலமர்வில் சமுகமளிக்குமாறு வடக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

இச்செயலமர்வில் வடக்குமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் வடக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் உட்பட மாகாணக்கல்வி அதிகாரிகள் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-5)

# சர்வதேச HIV/AIDS தினத்தையொட்டிய திறந்த கட்டுரைப் போட்டி - 2010

யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையினரின் ஏற்பாட்டில் SOND நிறுவனத்தின் அனுசரணையுடன் நடாத்தப்படுகிறது.

**தலைப்பு**

பாடசாலை மட்டம் : HIV/AIDS நோயிலிருந்து எதிர்கால சமூகத்தைப் பாதுகாப்போம்.

திறந்த மட்டம் : யாழ் மாவட்டத்தில் மாறிவரும் சமூக சூழலும் HIV/AIDS ஐ எதிர்கொள்வதற்கான சவால்களும்

**பரிசுகள் :**
1 ஆம் பரிசு - ரூபா 10,000.00
2 ஆம் பரிசு - ரூபா 7,500.00
3 ஆம் பரிசு - ரூபா 5,000.00

ஆறுதல் பரிசுகள் (ஐந்து) தலா ஒவ்வொன்றும் ரூபா 2,000.00

**நிபந்தனைகள்**

பாடசாலை மட்டம் -
1. தரம் 9 உம் அதற்கு மேற்பட்ட மாணவர்கள் மாத்திரம் பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தலுடன் பங்குபற்றலாம்.
2. கடித உறையின் மேல்பக்க மூலையில் சர்வதேச HIV/AIDS தினத்தையொட்டிய கட்டுரைப்போட்டி - 2010 (பாடசாலை மட்டம்) எனக் குறிப்பிடவும்.
3. 300 சொற்களுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.

திறந்த மட்டம் -
1. 500 சொற்களுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.

**பொது நிபந்தனைகள்**
1. பரிசு பெறும் முதல் மூன்று கட்டுரைகளும் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.
2. முடிவுத்திகதி : 18.11.2010

கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்,
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,
572/3, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

(சி-1543)

# மரண அறிவித்தல்

## திருமதி ஜோர்ஜ் பிரான்சிஸ்கம்மா



பாங்சால் வீதி, குருநகரை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜோர்ஜ் பிரான்சிஸ்கம்மா நேற்று முன்தினம் 02.11.2010 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஜோர்ச்சின் மனைவியும் காலஞ்சென்றவர்களான சூசை, செல்வம் தம்பதிகளின் அன்புமகளும் சின்னக்கிளி, காலஞ்சென்ற வேக்மன், செல்லக்கிளி, டெல்மா (டென்மார்க்), காலம்சென்ற யூட்டன், மூத்தவன், காலஞ்சென்ற ரவி ஆகியோரின் அன்புத் தாயாரும் வேவி, ஞானசௌந்தரி, அலோசியஸ், அன்ரனி(டென்மார்க்), குயின்மேரி ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்ற கிரேஸ், காலஞ்சென்ற இராசாத்தி, றுசின், யோகம்மா, கிங்கோம் ஆகியோரின் சகோதரியும்

அனுரன் - மொழி தம்பதியினர் (லண்டன்), பாலா - ஜசிந்தி தம்பதியினர் (ஜேர்மன்), சூட்டி, நிமால்(லண்டன்), றொபின்சன், ஜெனிற்றா, அன்ரனி, சூரி, நிக்சன், ராஜா-சிறிசாந்தி தம்பதியினர் (லண்டன்), ஜெனிபேட் -பிறீடா, றொசான் -ஜான்சி தம்பதியினர் (பிரான்ஸ்), டினேசினி,டொறின்,தர்சன்-நிசாந்தினி தம்பதியினர் (டென்மார்க்),சோபினி, அபிதரன், ஆர்த்தி (டென்மார்க்), உதயா, சரத், அமலா, அருண், பசில், அசோக் ஆகியோரின் பேர்த்தியும், நிசாந்தன், றொசான்,ஜெய்சாந், அக்ஷயா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதி நிகழ்வுகள் இல.141, பாங்சால் வீதி, குருநகர், யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள இல்லத்தில் 4.11.2010 (இன்று வியாழக்கிழமை) 3.00p.m மணிக்கு நடைபெற்று பின்னர் புனித யாகப்பர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : S.அலோசியஸ்
(மருமகன்)

(2800)

# இன்று ஒரு தகவல்

## வாய்ச்சவடால்

“இந்த வானத்தையே வில்லாக வளைக்க வேண்டுமா? அது என்னால் முடியும்'' என்று சொல்பவர்களுக்கு என்ன பெயர் தெரியுமா?

வாய்ச்சவடால் பேர் வழிகள் என்று பெயர்.

ஊரை வளைத்து வார்த்தையால் பந்தல் போட்டு விடுவார்கள். ஆனால் காரியத்தில் எப்படியென்று பார்த்தால், ஒரு சதத்துக்குக் கூட பிரயோசனம் இருக்காது. இப்படிப்பட்ட பலர் இந்த உலகத்தில் உண்டு.

அப்படிப்பட்ட 3 பேர் ஒரு ஊரில் இருந்தார்களாம்.

''என்னுடைய கண்பார்வை மிகவும் கூர்மை'' என்றான் ஒருத்தன்.

“என்னுடைய கண்பார்வை அதை விடக் கூர்மை” என்றான் இன்னொருத்தன்.

“என்னுடைய கண்பார்வை உங்களிருவரையும் விட கூர்மையானது. எவ்வளவு தூரத்திலிருந்தாலும் அதை என்னால் பார்த்து விட முடியும்” என்றான் மூன்றாவது ஆள்.

இந்த மூன்று பேருமே வாய்ச்சவடால் பேர் வழிகள். ஊரில் போகிறவர்கள் வருபவர்களையெல்லாம் கூப்பிட்டு வைத்து அளந்து கொண்டேயிருந்தார்கள்.

இவர்களுடைய அலட்டல் நாளுக்கு நாள் அதிகமாகி விட்டது. சனங்களால் இதை சகித்துக் கொள்ள முடியவில்லை.

என்ன செய்வதென்று யோசித்து ஒரு முடிவுக்கு வந்தார்கள்.

அந்த ஊர்க்காரர்கள் இந்த மூவரையும் கூப்பிட்டு ஒரு இடத்தில் உட்கார வைத்தார்கள்.

“இதோ பாருங்கள். நம்முடைய ஊரில் புதிதாக கட்டியிருக்கிறோமே கோயில்,அதன் கோபுர உச்சியில் கலசம் வைப்பதற்காக ஒரு பீடக்கல்லை நாளைக்கு உயரே ஏற்றிக் கொண்டு போய் வைக்கப் போகிறோம். அந்தக் கல்லின் மீது ஒரு சாசனம் பொறிக்கப் போகிறோம். நீங்கள் இங்கிருந்து அதில் என்ன எழுதியிருக்கிறது என்று படித்து சொல்ல வேண்டும். உங்களால் முடியுமா?'' என்றார்கள்.

“முடியும்” என்றார்கள் இவர்கள்.

கூட்டம் கலைந்ததும் மூவரும் என்ன செய்தார்கள் தெரியுமா?

ஒவ்வொருவரும் மற்றவருக்குத் தெரியாமல் அந்தக் கல்லை செய்த சிற்பியை தேடிக் கொண்டுபோனார்கள். முதலில் ஒருத்தன் போய்ச் சேர்ந்தான் .ஐயா.. அந்தக் கோபுரக்கலசத்துக்கு அடியில் வைக்கப் போற கல்லில் ஏதாவது எழுதியிருக்கிறதா?'' என்று விசாரித்தான்.

“அன்பே சிவம்” என்று எழுதியிருக்கிறது” என்றார் அவர்.

“இந்தாங்க! 500 ரூபாய்” என்று சொல்லி அவருடைய கையில் பணத்தை வைத்து விட்டுப் போய்விட்டான்.

அதன்பின் இரண்டாவது ஆள் வந்து சேர்ந்தான்.

''உச்சிக்கல்லில் என்ன எழுதியிருக்கிறது?'' என்று விசாரித்தான்.

“அன்பே சிவம் என்று எழுதியிருக்கிறது” என்றார்.

“வேறொன்றுமில்லையா?'' என்றான்.

“சொன்னவர் திருமூலர் என்று கீழே எழுதியிருக்கிறது” என்றார்

“இந்தாங்க ஆயிரம் ரூபாய்” என்று கொடுத்துவிட்டு அவனும் போய்விட்டான். அடுத்தவன் வந்தான். விசாரித்தான்.

“அன்பே சிவம் சொன்னவர் திருமூலர்” என்று எழுதியிருக்கிறது என்று இவர் சொன்னார்.

“அதற்குக் கீழே ஏதாவது எழுதியிருக்கிறதா?” என்று கேட்டான்.

“உபயகாரர் உலகநாதன் என்று எழுதியிருக்கிறது” என்றார்.

“இந்தாங்க 1500 ரூபாய்” என்று கொடுத்து விட்டுப் போனான். மறுநாள், அந்தக் கோபுரத்துக்கு முன்னால் எல்லோரும் கூடியிருந்தார்கள். இந்த மூன்று பேரும் அலட்சியமாக வந்து நின்றார்கள். முதலாமவன் கோபுரத்தை நிமிர்ந்து பார்த்தான்.

“அன்பே சிவம் என்று எவ்வளவு அழகாக எழுதியிருக்கிறார்கள்” என்றான்.

“உன் கண்ணுக்கு அவ்வளவு தான் தெரிந்ததா? அதற்குக் கீழே சொன்னவர் திருமூலர் என்று எழுதியிருக்கிறதே அது தெரியவில்லையா?” என்றான் இரண்டாமவன். மூன்றாமவன் வந்தான்.

''உங்கள் கண்பார்வை அவ்வளவு தானா? அதற்கும் கீழே சிறிய எழுத்தில் உபயகாரர் உலகநாதன் என்று எழுதியிருக்கிறதே. அதுகூட எனது கண்ணுக்குப் பளிச்சென்று தெரிகிறது” என்றான்.

மூவரும் ஜம்பமாக கொலரைத் தூக்கிவிட்டுக் கொண்டு நின்றார்கள்.

''எப்படி நாங்கள் சொன்னது சரிதானா? வேண்டுமானால் மேலே ஏறிப்போய் பார்த்துவிட்டு வாங்க” என்று வேறு சொன்னார்கள்.

''மேலே ஏறிப் போய் பார்க்க வேண்டிய அவசியமில்லை'' என்றார்கள் ஊர் மக்கள்.

“ஏன் ?” என்று கேட்டான் இந்த மூவரில் ஒருத்தன். அதற்கு அந்த ஊர்த்தலைவர் பதில் சொன்னார்:

“ஏனென்றால்... அந்த சிலாசாசன கல்லை நாங்கள் இன்னும் கோபுரத்து உச்சிக்குக் கொண்டு போகவில்லை. இன்னும் கொஞ்சம் வேலை பாக்கியிருக்கிறது. நாளைக்குத் தான் மேலே கொண்டு போய் வைக்கப் போகிறோம்” என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# உலக விஞ்ஞான தினத்தை முன்னிட்டு
# சித்திர, வினாடிவினாப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

உலக விஞ்ஞான தினத்தை முன்னிட்டு தொழில் நுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி அமைச்சு, தேசிய விஞ்ஞான மன்றத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்டத்தில் மாணவர்களுக்கான சித்திரப் போட்டி , வினாடி வினாப் போட்டி ஆகியவற்றை நடாத்தவுள்ளது.

வினாடி வினாப் போட்டியில் பங்கு கொள்ளும் மாணவர்களது பெயர் விபரங்களை எதிர்வரும் 8ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னதாகவும் சித்திரப்போட்டிக்கான ஆக்கங்களை எதிர்வரும் 15ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னதாகவும் தத்தம் பகுதியில் உள்ள விதாதா வள நிலையத்தில் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்குமாறு யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் அறிவித்துள்ளார்.

மேலும் சித்திரப்போட்டிக்கு வலய ரீதியாக இடம்பெறவுள்ள முதல் கட்டப்போட்டியில் இருந்து 20 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களது ஆக்கங்கள் மாவட்ட மட்டத்தில் நடைபெறும். போட்டிக்காக அனுப்பிவைக்கப்படும். மாவட்ட மட்டத்தில் நடைபெறும் இரண்டாம் சுற்றில் வெற்றி பெற்ற படைப்பாளிகளுக்கான சான்றிதழ்கள் மற்றும் விருதுகள் டிசம்பர் 7ஆம் திகதி யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ள உலக விஞ்ஞான தின விழாவில் வழங்குவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இப்போட்டியில் பிரிவு 1 இல் தரம் 6 , 7 , 8 மாணவர்களும் பிரிவு 2இல் தரம் 9 ,10 , 11 மாணவர்களும் பங்குபற்ற முடியும்.

போட்டிக்கான வரையறைகளும் நிபந்தனைகளும் வருமாறு,

காலநிலை மாற்றம் மற்றும் பூ கோளம் வெப்பமயமாதல் முதலான விடயப் பொருளில் வரையலாம். வரைதலுக்கு நீர் விரும்பும் சாதனங்களை உபயோகிக்கலாம். சித்திரம் 18X14 அங்குல அளவான தாளில் வரையப்படல் வேண்டும்.

ஒருவர் ஒரு ஆக்கத்தை மட்டுமே சமர்ப்பிக்கலாம். போட்டி அனுப்பப்பட்ட ஆக்கம் வேறு எப்போட்டிகளுக்கும் அனுப்பப்படல் ஆகாது, தெரிவுக்குழு அங்கத்தவர்களின் முடிவே இறுதியானது. சித்திரப் படத்தின் பின்புறத்தில் முழுப்பெயர் , பிறந்த திகதி, வயது, முகவரி, போட்டிப்பிரிவு மாவட்டம் , தொலை பேசி இலக்கம் ஆகியவற்றை ஆங்கிலத்தில் குறிப்பிட்டு விண்ணப்பதாரி ஒப்பமிடுவதோடு பாடசாலை அதிபர் மாணவரின் சொந்த ஆக்கம் என உறுதிப்படுத்தி அலுவலக முத்திரை இடுதல் வேண்டும்.

போட்டியாளர்கள் தங்களது ஆக்கங்களை 15ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னதாக தத்தம் பிரதேச செயலக விதாத வள நிலைய விஞ்ஞான தொழில் நுட்பவியல் உத்தியோகத்தருக்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும்.

வினாடி வினாப் போட்டி 12 , 13ஆம் வகுப்பு மாணவர்களுக்காக நடாத்தப்படும். இப்போட்டி குழுப் போட்டியாகவே இடம்பெறும். ஒரு குழுவில் 3 மாணவர்கள் மட்டுமே இருத்தல் வேண்டும். ஒரு பாடசாலையில் இருந்து ஒரு குழு மட்டுமே பங்கு கொள்ளலாம். பூகோளம் வெப்பமயமாதல் மற்றும் கால நிலை போன்ற எண்ணக் கருக்களில் மாத்திரமே வினாக்கள் அமைந்திருக்கும்.

பங்கு பற்றும் மாணவர்களின் விபரங்கள் பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்டு எதிர்வரும் 8ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னர் தத்தம் பிரதேச செயலக விதாதா வள நிலைய விஞ்ஞான தொழில்நுட்பவியல் உத்தியோகத்தருக்கு அனுப்பி வைக்குமாறு யாழ். மாவட்ட செயலக மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-19)

# இராசி பலன்

04.11.2010

(ஐப்பசி 18, வியாழக்கிழமை)

திரயோதசி பிற்பகல் 3.09 மணிவரை

அத்தம் பிற்பகல் 2.44 மணிவரை

இராகுகாலம் 1.34-3.04 மணிவரை

சுபநேரம் 7.34-9.04 மணிவரை

**மேடம்** ஆரோக்கியம் சீராகி உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள்,விலையுயர்ந்த பொருள் சேரும்,அன்பு நண்பர்களின் சந்திப்பு கிட்டும், சுப நிகழ்வுகளில்கலந்து கொண்டு மகிழும் நாள்.

**இடபம்** சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், குடும்பத்தினரின் பேரன்பைப் பெறுவீர்கள், ஆடம்பரப் பொருட்கள் அன்பளிப்பாக வந்து சேரலாம், தன வரவு திருப்தி தரும்.

**மிதுனம்** பொன்னான நாள்,பிறர் போற்றும் வகையில் காரியம்ஒன்றைச் செய்து முடிப்பீர்கள், பிரியமானவர்களின் சந்திப்பு கிட்டும்,பெற்றோர் நலனில் கூடிய அக்கறை காட்டுவீர்கள்.

**கடகம்** பிற இனத்தவரால் பெருமை சேரும் நாள்,அடுத்தவர் நலனில் அக்கறை எடுப்பீர்கள்,தொழிலில் போட்டியாக இருந்தவர்கள் விலகுவர், புதிய திட்டங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**சிங்கம்** ஆடம்பரப் பொருட்கள் வாங்கு வதில் அதிக ஆர்வம் ஏற்படும், வெளியூரில் மதிக்கப்படுவீர்கள், தொழில் வளர்ச்சி மேலோங்கும், அதிகாரிகள் ஒத்துழைப்பு வழங்குவர்.

**கன்னி** சுபவிரயம் ஏற்படும் நாள், புதிய நபர்களின் அறிமுகம் கிட்டும், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் அச்சுறுத்தல் ஏற்பட்டு அகலும், குடும்பத்தில்பொறுப்புக்களும் சுமைகளும் கூடலாம்.

**துலாம்** இல்லத்திலும் உள்ளத்திலும் அமைதி கூடும் நாள், நாணயத்தோடு நடந்து கொள்வதால் அனைவரும் உங்களைப் பாராட்டுவர், பிரியமானவர்களுடன் பயணங்களை மேற்கொள்வீர்கள்.

**விருச்சிகம்** சொல்லைச் செயலாகி காட்டுவீர் கள், தொலை பேசித்தகவல் மகிழ்ச்சி தரும், தொழில் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சி வெற்றி தரும், பொருளாதார நிலை உயரும்.

**தனுசு** நினைத்த காரியத்தை செய்து முடிப்பீர்கள், பண வரவு திருப்திகரமாக அமையும்,தொழில் முன்னேற்றத்திற்கு பெண்கள் வழி ஒத்துழைப்பு கிடைக்கும், தேக நலன் உற்சாகமாக காணப்படும்.

**மகரம்** தைரியத்தோடு செயற்பட்டு சாதனை படைக்கும் நாள், நீண்ட நாளைய பிரச்சினையொன்று முடிவுக்கு வரலாம், வருமானம் போதுமானதாக அமையும், பயண நன்மையுண்டு.

**கும்பம்** வரவை விட செலவு அதிகரிக்கும், பயண அலைச்சல்கள் காத்திருக்கும், மனதில் அமைதி குறைவு காணப்படும், பிறரை அனுசரித்துச் செல்வது நல்லது.

**மீனம்** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், வாழ்க்கைத்துணை வழியே வரவு வந்து சேரும், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சி வெற்றி தரும், கனவு பலிதமுண்டு.

வளவன்

# கணித பாட பயிற்சிப்பட்டறை

தேசிய வாசிப்பு மாதத்தை முன் னிட்டு சாவகச்சேரி நகர சபையினரின் சாவகச்சேரி,மீசாலை, நுணாவில் பொதுநூலகங்கள் இணை ந்து பாடசாலை மாணவர்களிடை யே நடாத்தும் கணித பாட பயிற்சிப் பட்டறை இன்று காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில் தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கு தேசிய வாசிப்பு மாத இறுதி நாள் நிகழ்வில் பரிசில்கள் வழங்கப்படும் என்று சபையின் செயலாளர் செல்வி .வி. சிவக்கொழுந்து தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 90 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 90 |
| பச்சைமிளகாய் | 60 | 110 | 80 |
| தக்காளி | 70 | 110 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 50 |
| கோவா | 50 | 70 | 70 |
| கரட் | 60 | 80 | 80 |
| பூசணி | 50 | 40 | 40 |
| புடோல் | 60 | 50 | 50 |
| வாழைக்காய் | 30 | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 90 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 80 |
| பாகற்காய் | 140 | 160 | 130 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 70 |
| கருணைக் கிழங்கு | 50 | 50 | 50 |
| பயற்றங்காய் | 100 | 140 | 90 |
| லீக்ஸ் | 120 | 120 | 100 |
| பீற்றூட் | 40 | 60 | 50 |
| கறிமிளகாய் | 100 | 140 | 100 |
| முருங்கைக்காய் | 150 | 160 | 100 |
| போஞ்சி | 140 | 140 | 130 |
| கத்தரிதம்புள்ள | 40 | 70 | 60 |
| கீரை – 1 பிடி | 20 | 30 | 25 |
| தேசிக்காய் | 80 | 120 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 45 | 50 | 40 |



வடமாகாண முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிறுவனத்தின் அனுசரணையுடன் நிகழ்ச்சி திட்ட உதவியாளர்களுக்கான மூன்று நாள் பயிற்சிப்பட்டறை திட்டமிடல் நெறிமுறைகள் செயலமர்வு நேற்று யாழ்.கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் ஆரம்பமானது. இச்செயலமர்வினை கிராம அபிவிருத்தி மாகாணப் பணிப்பாளர் என்.பெலிசியன் நடாத்துவதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

## வாடிக்கையாளர் மற்றும் மாணவர்கள் கௌரவிப்பு

வல்வெட்டித்துறை மக்கள் வங்கியினால் நடாத்தப்படும் வாடிக்கையாளர் கௌரவிப்பும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர் கௌரவிப்பும் தீபாவளித் தினமான நாளை முற்பகல் 10.45 மணிக்கு வல்வெட்டித்துறை மக்கள் வங்கியால் அவ்வங்கி முகாமையாளர் பி.கிருஷ்ணானந்தன் தலைமையில் நடைபெற உள்ளது.

இதில் சிறப்பு விருந்தினராக யாழ். மக்கள் வங்கியின் உதவிப் பிராந்திய முகாமையாளர் கே.சுசீந்திரன் கலந்து கொள்ளவுள்ளார். (ஸ்ரீ)

## மாபெரும் தடகள விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

தீபாவளித் தினத்தை முன்னிட்டு கோப்பாய் கண்ணகை அம்மன் சனசமூகநிலையமும் மற்றும் ஸ்ரார் விளையாட்டுக் கழகமும் இணைந்து நடாத்தும் மாபெரும் தடகள விளையாட்டுப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் பிற்பகல் 1.30 மணிக்கு க.கோபிதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும் கோப்பாய் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான சில்வேஸ்திரி அலென்ரின் கலந்துகொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார், கோப்பாய் உதவிப் பிரதேச செயலர் செல்வி ச.பிரேமினி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஸ்ரீ-6)

## தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில் பொது அங்கத்துவக் கூட்டம்

(கொழும்புத்துறை)

தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில் இலங்கை சர்வமத ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைந்த சமூக வெளிப்பாட்டின் ஊடாக மனித நேயத் தீர்வுகளைச் சாத்தியமாக்கும் பொது அங்கத்துவக் கூட்டம் யாழ்ப்பாணம் செம்மணி வீதியில் உள்ள தூய யாக்கோபு ஆலய மண்டபத்தில் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மதியம் 1 மணி வரை மீகா ஜந்துறே ஸ்ரீவிமலதேர, அருட்தந்தை பிரவீன், கிருபானந்தக் குருக்கள், மௌலவி சுபியான் ஆகியோரின் ஒருங்கிணைப்பில் நடைபெறவுள்ளது.

தேசிய சமாதானப் பேரவையானது சமயத் தலைவர்கள் மற்றும் சமூகத் தலைவர் மத்தியில் சமாதானத்தைக் கட்டியெழுப்புதல், இனங்களுக்கிடையேயான நல்லிணக்கம், முரண்பாட்டுத் தீர்வு மற்றும் தலைமைத்துவ மேம்பாடு ஆகியவற்றை வளர்க்கும் நோக்கில் 12 மாவட்டங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட மதத்தலைவர்கள், சமூகத் தலைவர்களை ஒருங்கிணைத்துள்ளதாகவும் சமூகத்தில் போர்ச்சூழலில் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் மற்றும் பெண்களுக்கான மனிதநேயச் செயற்பாடுகள் குறித்து மேற்படி கூட்டத்தில் ஆராயப்படவுள்ளது.

இதன் முதற் கட்டமாக கடந்த மே மாதம் சர்வ மதத் தலைவர்களுக்கிடையில் செயற்குழு தெரிவு செய்யப்பட்டுள்ளதாக சமாதானத்திற்கும் நல்லிணக்கத்துக்குமான இயக்குநர் அருட்தந்தை பிரவீன் தெரிவித்தார். (ஸ்ரீ-51)

## ஆன்மீக சொற்பொழிவு

(மருதங்கேணி)

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயச் சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமைதோறும் நடைபெற்றுவரும் ஆன்மீக நிகழ்வுத் தொடரில் எதிர்வரும் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு பூசை முடிவுற்றதும் மகாபாரதம் என்னும் விடயம் பற்றி யாழ். புதிய உயர்கல்லூரி விரிவுரையாளர் பண்டிதர் பொன்.சுகந்தன் ஆன்மீக சொற்பொழிவாற்றவுள்ளார். (ஸ்ரீ-35)

✠ ✠ ✠

(மருதங்கேணி)

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வுத் தொடரில் நாளை வெள்ளிக்கிழமை மு.ப 10.30 மணிக்கு ***வெள்ளிக்கிழமை விரதத்தின் அற்புதங்கள்*** என்னும் விடயம் பற்றி இளைப்பாறிய ஆசிரியர் வே.தனபாலன் ஆன்மீகச் சொற்பொழிவாற்றவுள்ளார். (ஸ்ரீ-35)

## மின்சார வசதி இன்மையால் இருளில் மூழ்கியுள்ள கிராமம்

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கு மணற்காடு பகுதிக்கு இதுவரை சீரான மின்சாரம் வழங்கப்படவில்லை என அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, மணற்காடு கிராமத்தில் ஆரம்பத்தில் 7 வீடுகளுக்கு மின்சாரம் இருந்ததாகவும் சுனாமி அனர்த்தத்தின் பின் இம் மின் இணைப்புக்கள் துண்டிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது இக் கிராமத்தில் மின் கம்பிகள் இணைக்கப்பட்டு ஏனைய வேலைகள் முடிவடைந்தும் இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை என அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதனால் மணற்காட்டு கிராமம் இருளில் மூழ்குவதாகவும் பாடசாலை மாணவர்கள் குப்பி விளக்குகளிலேயே இரவு கல்வியைத் தொடர்வதாகவும் மின்சாரத்தில் பயன்படுத்தும் பொருட்களைக் கொண்டு வேலைகள் செய்யமுடியாது உள்ளதாகவும் இப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே உரியதரப்பினர் நடவடிக்கையினை மேற்கொண்டு இந்தக் கிராமத்திற்கு மின்சாரத்தைப் பெற்றுத் தரவேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ஸ்ரீ-64)

## கவிதைப் போட்டியில் முதற்பரிசு



சிந்துபுரம், வட்டு-வடக்கு வட்டுக் கோட்டை யைச் சேர்ந்த கவிஞர் வ.யோகானந்தசிவம் மன்னார் செம்மொழி மாநாட்டுக் குழுவின ரால் நடத்தப்பட்ட கவிதைப் போட்டியின் முதற் பரிசு பெற்றுள்ளார்.

மேலும் இவர் பல கவிதைப் போட்டிகளில் பங்குபற்றி முதற் பரிசுகளைப் பெற்றுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும். (ஸ்ரீ)

நக்கீரன் சனசமூக நிலைய

## 62 ஆவது வருட நிறைவு விழாவை முன்னிட்ட போட்டிகள்

(கரவெட்டி)

அல்வாய் வடக்கு நக்கீரன் சனசமூக நிலையத்தின் 62 ஆவது வருடாந்த நிறைவு விழாவும் தீபாவளியை முன்னிட்ட இல்ல தடகளப் போட்டிகளும் வெளிக்கழகங்களுக்கான 5 மைல் மரதன் ஓட்டப் போட்டியும் நாளை வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு இடம் பெறவுள்ளது.

இறுதி நிகழ்வுகள் பிற்பகல் 2.39 மணிக்கு நக்கீரன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நிலையத்தலைவர் க.யோகநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இவ்விழாவுக்கு பிரதம விருந்தினராக பருத்தித்துறை பிரதேச சபைச் செயலர் ச. சந்திரயோகன் கலந்து கொள்ளவுள்ளார். (ஸ்ரீ-24)




## வடமராட்சி கிழக்கிலுள்ள மீனவக்குடும்பங்களுக்கு நான்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் உதவி

(கரவெட்டி)

வடமராட்சி கிழக்கில் அண்மையில் மீள் குடியேற்றம் செய்யப்பட்ட 10 கிராமங்களைச் சேர்ந்த 525 இற்கும் மேற்பட்ட மீனவ குடும்பங்களுக்கு தமது மீன்பிடித் தொழிலை மேம்படுத்துவதற்கு பாசிக், சோ ஆ, யுன்.என்.டி.பி. , போரூட் ஆகிய நான்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் உதவிகளை வழங்கியுள்ளன.

இதில் மாமுனை , செம்பியன்பற்று , தாளையடி, மருதங்கேணி , வத்திராயன் , உடுத்துறை , ஆழியவளை , வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு , சுண்டிக்குளம் போன்ற கிராம மக்கள் பயனடைந்துள்ளனர்.

இவர்களது மீன்பிடித் தொழிலை மேம்படுத்தும் நோக்கில் மீன்பிடித்தொழிலுக்கான உபகரணங்கள் வழங்கப்பட்டதாக அரச சார்பற்ற நிறுவனங்களின் உயர் அதிகாரிகள் தெரிவித்தனர்

மேற்குறித்த நிறுவனங்கள் 10 கிராமங்களின் மீனவர்களுக்கு தமது உபகரணங்களை பகிர்ந்து வழங்கியுள்ளனர். இதில் இயந்திரப்படகு, இழுவைப்படகு , கட்டுமரம் மற்றும் மீன்பிடி உபகரணங்கள் என்பன உள்ளடங்கும்.

போரினால் தமது அனைத்து மீன்பிடி உபகரணங்களையும் இழந்து தற்போது வாழ்வாதாரத்தை முன்னெடுக்கமுடியாமல் நிர்க்கதியாகி உள்ள நிலையில் இந் நிறுவனங்கள் வழங்கிய மீன்பிடித் தொழில் உபகரணங்கள் மூலம் ஓரளவேனும் தமது மீன்பிடி தொழிலை முன்னடுக்கமுடியும் என்று அம் மக்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் தமது பிரதேசங்களில் ஆயிரக்கணக்கான மீனவக் குடும்பங்கள் மீன்பிடி உபகரணங்கள் இன்மையால் தொழில் செய்வதற்கு பல கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளனர் எனவும் அவர்களுக்கும் அரச சார்பற்ற நிறுவனங்கள் உதவி செய்ய முன்வரவேண்டும் என்று அப்பகுதி மக்கள் கேட்டுள்ளனர். (ஸ்ரீ-24)

## சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் சுகாதார விழிப்புணர்வு கண்காட்சி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி வைத்திய அதிகாரி பிரிவினரால் நடத்தப்படும் சுகாதார விழிப்புணர்வுக் கண் காட்சி இன்றுகாலை 8.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் சாவகச்சேரி பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் க.தயாளன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சிப் பிரதேச செயலர் திருமதி அஞ்சலி தேவி சாந்தசீலன், மலேரியா தடை இயக்க பிராந்திய வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி க.த.சிவபாதம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு. பிறேமகாந்தன், சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் அ.கையாலயபிள்ளை, தென்மராட்சி கோட்டக் கல்வி அதிகாரி கு.சிவானந்தம், யாழ். பிராந்திய பொதுச் சுகாதார தாதிய உத்தியோகத்தர் திருமதி.ர.நவரத்தினம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இக்கண்காட்சியில் பல்வேறுபட்ட இளம் பராயத்தினருக்கு வழிகாட்டும் கண்காட்சிப் பொருட்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-29)

# அடுத்த அமைச்சரவையில் எஸ்.பி.க்கு வேறு பொறுப்பு வழங்கப்படலாம்

## ஜனாதிபதி செயலக தகவல்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

இம் மாத நடுப்பகுதியில் மேற்கொள்ளப்படும் அமைச்சரவை மாற்றத்தின் போது உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்கவை அந்தப் பொறுப்பிலிருந்து அகற்ற வேண்டுமென்பதில் ஜனாதிபதியின் மூத்த புதல்வரும் பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தீவிரமாகச் செயற்பட்டு வருவதாக ஜனாதிபதி செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பல்கலைக்கழக மாணவர்கள் கைது தொடர்பான விடயத்தில் தலையிட்டு தனது அரசியல் பிரபலத்தை அதிகரித்துக் கொள்ள நாமல் ராஜபக்ஷ எடுத்த முயற்சியை எஸ்.பி. திசாநாயக்க முறியடித்ததே அதற்கான காரணம் என்று தெரிய வருகின்றது.

அடுத்து வரும் அமைச்சரவை மாற்றத்தின் போது திசாநாயக்கவின் அமைச்சுப் பொறுப்பில் எதுவித மாற்றமும் மேற்கொள்ளாதிருக்க ஜனாதிதி ஏற்கனவே தீர்மானித்திருந்த போதிலும் தற்போதைக்கு நாமலின் வற்புறுத்தல் காரணமாக அவரும் சற்று இறங்கி வந்துள்ளதாக அறியமுடிகின்றது.

அதன் பிரகாரம் அடுத்த அமைச்சரவை மாற்றத்தின் போது பெரும்பாலும் முன்னைய கல்வி அமைச்சர் ஒருவர் அல்லது கெஹலிய ரம்புக்வெல்ல கல்வியமைச்சுப் பொறுப்பை ஏற்கக் கூடும் என்றும் ஜனாதிபதி செயலகத்திலிருந்து கிடைக்கும் தகவல்களிலிருந்து மேலும் தெரிய வந்துள்ளது.

அத்துடன் தற்போதைக்கு பாராளுமன்றத்தின் பின் வரிசை உறுப்பினர்களாக உள்ள நாமலின் நண்பர்கள் சிலருக்கும் பிரதியமைச்சர் பதவிகள் வழங்கப்படவுள்ளதாகவும் தகவல்கள் கசிகின்றன.

சனத் ஜயசூரிய, கனக ஹேரத், ஸ்ரீ ரங்கா ஆகியோர் அவர்களில் உள்ளடங்கலாம் என்றும் கூறப்படுகின்றது. (ஸ்ரீ)

# கிழக்கு மாகாண அதிரடிப்படை முகாம்கள் டிசம்பர் முதல் முற்றாக அகற்றப்படும்

## இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

கிழக்கு மாகாணத்தில் உள்ள அதிரடிப் படை முகாம்கள் எதிர்வரும் டிசம்பர் மாதம் 15 ஆம் திகதி முற்றாக அகற்றப்படும் எனவும் இராணுவத்தினர் இந்த மாகாணத்தின் பாதுகாப்பை பொறுப்பேற்கவுள்ளதாகவும் இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் உபய மெதவல தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக கிழக்கில் உள்ள அதிரடிப்படையினரின் முகாம்கள் அகற்றப்பட்டு வருகின்றன.

டிசம்பர் 15ஆம் திகதிக்கு பின்னர் நாட்டின் முழு பாதுகாப்பு பொறுப்பும் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்படவுள்ளது எனவும் அவர் கூறியுள்ளார்.

அதேவேளை டிசம்பர் 15ஆம் திகதியில் இருந்து நாட்டில் உள்ள சகல மாவட்டங்களிலும் தலா ஒரு அதிரடிப்படை முகாம் ஸ்தாபிக்கப்படும். அதிரடிப்படையினர் எதிர்வரும் காலங்களில் பொலிஸாருக்கு அவசர சந்தர்ப்பங்களில் உதவிகளை வழங்குவர் எனவும் மெதவல மேலும் கூறியுள்ளார். (ஸ்ரீ)

### உணவு விஷமடைந்ததால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதி

உணவு விஷமடைந்ததால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள றுஹுனு பல்கலைக்கழக மாணவர்கள் 11 பேரும் தொடர்ந்தும் மாத்தறை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த மாணவர்களின் நிலைமை முன்னேற்றமடைந்துள்ளதாக மாத்தறை வைத்தியசாலையின் பணிப்பாளர் எம்.ஏ.எஸ்.சீ. சமரக்கோன் தெரிவித்தார்.

உணவு விஷமடைந்ததால் கடந்த திங்களன்று மொத்தம் 15 மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ)

### அம்பாறையில் மர்ம வெடிபொருள் நேற்று காலை மீட்கப்பட்டது

அம்பாறை அக்கரைப்பற்று ஊர் போடியார் வீதியில் மர்ம வெடிபொருள் ஒன்று நேற்று காலை 10.15 மணியளவில் மீட்கப்பட்டுள்ளது.

ஊர்போடியார் வீதியில் புதிய வீடு கட்டுவதற்காக நிலத்தை தோண்டிய போது மறைத்து வைக்கப்பட்டிருந்த வெடிபொருளொன்றை பொதுமக்கள் கண்டெடுத்துள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸாருக்கு விசேட அதிரடிப்படையினருக்கும் அறிவித்ததை அடுத்து தொடர்ந்து சம்பவ இடத்திற்கு விரைந்த விசேட அதிரடிப்படையினரின் குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினர் அந்த மர்ம வெடி குண்டு தொடர்பாக ஆராய்ந்து வருகின்றனர்.

பிளாஸ்டிக்கினாலான அந்த மர்ம வெடி பொருள் எந்த ரகத்தினை சார்ந்தது என்பது தொடர்பாக குண்டு செயலிழக்கும் பிரிவினர் ஆராய்ச்சியினை மேற்கொண்டு வருகின்றனர். (ஸ்ரீ)

# அரசியல் எதிர்ப்புக்களால் மின்சார சபைக்கு ஒவ்வொரு வருடமும் 800 கோடி ரூபா இழப்பு

## அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு

(கொழும்பு)

அரசியல் எதிர்ப்புகளால் இலங்கை மின்சார சபைக்கு வருடத்துக்கு 800 கோடி ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளதென எரிசக்தி மின்சக்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கொத்மலை நீர் மின் உற்பத்தி நிலைத்தின் நீர் ஓட்ட சுரங்கப்பாதையின் நிர்மாணப் பணிகள் பூர்த்தி அடைந்துள்ளது பற்றியும் இன்று இப்பாதை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் மக்கள் பார்வைக்காக திறந்து வைக்கப்படுவது குறித்தும் விளக்கம் அளிக்கும் ஊடகவி யலாளர் சந்திப்பு நேற்று காலை தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது.

இதில் உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் இறுதி அங்கமான கொத்மலை நீர் மின் உற்பத்தி நிலையத்தை அமைக்க 2000ஆம் ஆண்டளவில் ஆரம்பக்கட்ட வேலைகள் ஆரம்பிக்கப்பட இருந்த போதிலும் அரசியல் எதிர்ப்புக்களால் அது தடைப்பட்டது. இதனால் பல வருடங்கள் அந்தத் திட்டம் முடங்கிக் கிடந்தது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பதவிக்கு வந்ததும் இதற்குத் தீர்வுகண்டு திட்டம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதுடன் தற்போது திட்டம் பூர்த்தி அடையும் நிலையை மிகவும் நெருங்கியுள்ளது.

அதன்படி கொத்மலை நீரோடைக்கு குறுக்காக 35.5. மீற்றர் உயரம் கொண்டதும் 180 மீற்றர் நீளம் கொண்டதுமான அணைக் கட்டு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் மின் உற்பத்திக்கான நீரைச் செலுத்தக்கூடிய 5.2 மீற்றர் விட்டம் கொண்ட 12.9 கிலோ மீற்றர் நீளம் கொண்ட சுரங்கப் பாதையும் அமைக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்துக்கு ஜப்பான் கடனுதவியாக வழங்கிய 34 பில்லியன் ரூபாவும் இலங்கை அரசாங்கம் 10 பில்லியன் ரூபாவையும் செலவிடப்பட்டுள்ளது.

இதனூடாக வருடத்துக்கு 409 ஜிகா வோட் மின்சாரத்தைப் பெற எதிர்பார்க்கப்படுகிறது. இந்த அளவு மின்சாரம் கிடைப்பதால் வருடத்துக்கு 800 கோடி ரூபா இலங்கை மின்சார சபைக்கு கிடைக்கின்றது.

அரசியல் எதிர்ப்புகளும் தலையீடுகளும் காரணமாக திட்டம் பல வருடங்கள் தாமதடைந்தது. இதனால் வருடத்துக்கு 800 கோடி ரூபா வீதம் மின்சார சபைக்கு கிடைக்க இருந்த பெரும் தொகைப் பணத்தை பல வருடங்களாக இழக்க நேரிட்டுள்ளது.

கொத்மலை சுரங்கப் பாதை ஜனாதிபதியால் திறந்து வைக்கப்பட்டதும் மக்கள் பார்வைக்காக மூன்று நாட்கள் வழங்கப்படவுள்ளது. இது ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு அரிய சந்தர்ப்பமாகும். இதன் ஊடாக நீர் செலுத்தப்பட்ட பின்னர் மீண்டும் எப்போது அதனைப் பார்வையிடக் கிடைக்கும் என்பதைக் கூறமுடியாது.

அதன்படி நாளை முதல் 7ஆம் திகதி வரை காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை மக்கள் பார்வைக்கு அனுமதிக்கப்படும் என அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க மேலும் தெரிவித்தார்.

(ஸ்ரீ)



யாழ்.பொலிஸ் நிலையத்தின் வாகனத்தரிப்பிடத்துக்குச் செல்லும் பாதையிலுள்ள பாலம் உடைந்து காணப்படுவதை படத்தில் காணலாம்.

# பதில் பிரதம நீதியரசராக சிராணி பண்டாரநாயக்க நியமனம்



உயர் நீதிமன்ற சிரேஷ்ட நீதயரசரான சிராணி பண்டாரநாயக்க பதில் பிரதம நீதியரசராக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

அலாமாளிகையில் இது தொடர்பான நிகழ்வு இடம் பெற்றது.

ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க உட்பட முப்படைத் தளபதிகளும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (ஸ்ரீ)

# இங்கிலாந்து பல்கலைக்கழகங்களில் கல்விக் கட்டணங்கள் அதிகரிப்பு

(லண்டன்)

2012ஆம் ஆண்டு முதல் இங்கிலாந்து பல்கலைக்கழகங்களில் ஆண்டு ஒன்றுக்கு 9ஆயிரம் பவுண்ஸ் கட்டணமாக வசூலிக்கப்படும் என அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

தற்போது இருக்கும் கட்டணத்தை விட இது பல மடங்கு அதிகம் என்பதால் பிரிட்டனில் வசிக்கும் பல ஏழை மாணவர்களுக்கு உயர் கல்வி என்பது ஒரு எட்டாக் கனியாக மாறும் சூழ்நிலை உள்ளது.

அரசின் இந்த முடிவை எதிர்த்து மாணவர் அமைப்புக்கள் போராட்டத்தில் குதித்து வருகின்றன.

இதனால் அரசு மிகப்பெரிய பின்னடைவு நிலையை சந்திக்க வேண்டி வரும் எனவும் எச்சரிக்கை விடுக்க தொடங்கியுள்ளனர். தற்போது ஆண்டு ஒன்றுக்கு மூவாயிரத்து 290 பவுண்ஸ் கல்விக்கட்டணமாக வசூலிக்கப்பட்டு வருகிறது.

அரசின் செலவினக்குறைப்பு நடவடிக்கைகளால் இங்கிலாந்தில் இருக்கும் கலை ,அறிவியல் பல்கலைக்கழகங்கள் அரசின் நிதியுதவிகளை இழக்கவேண்டிய சூழ்நிலை உருவாகும் என்பதாலேயே இந்த மாற்றங்கள் நடைமுறைக்கு கொண்டுவரப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ)

# மாணவர்கள் ஆயுதப் பயிற்சி பெறுவதாக துணைவேந்தர் கூறியமை கண்டிக்கத்தக்கது

## மங்கள எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

மாணவர்கள் ஆயுத பயிற்சி பெற்றுக் கொண்டுள்ளதாக துணைவேந்தர் வெளியிட்ட கருத்து கண்டிக்கப்பட வேண்டியதென ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

ஜயவர்தனபுர பல்கலைக்கழக மாணவர்கள் கோட்டே பிரதேசத்தில் ஆயுதப் பயிற்சி பெற்றுக் கொண்டுள்ளதாக பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் அண்மையில் வெளியிட்ட கருத்துக்கு பதிலளிக்கும் வகையில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மாணவர்கள் ஆயுத பயிற்சி பெற்றுக் கொண்டிருந்தால் எங்கு, எப்போது, எவ்வாறு பெற்றுக் கொண்டார்கள் போன்ற தரவுகள் வெளியிடப்பட வேண்டுமெனவும் திட்டமிட்ட வகையில் மாணவர்களுக்கு எதிராக போலிக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை கட்சிகளுக்கு அச்சுறுத்தல் விடுத்து அரசாங்கம் 18 ஆவது திருத்தச் சட்ட மூலத்தை நிறைவேற்றிக் கொண்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்திற்கு எதிராக செயற்படுவோரை கட்டுப்படுத்தும் நோக்கில் சகல மாவட்டங்களிலும் இராணுவ முகாம் ஒன்றை அமைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

(ஸ்ரீ)

# இலங்கைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட அம்புலன்ஸ், உபகரணங்கள் கையளிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட வாகனங்கள் மற்றும் உபகரணங்களை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கும் நிகழ்வு ஜனாதிபதி செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

இந்நிகழ்வின்போது தீயணைப்புப்படைக்கு அம்புலன்ஸ் வண்டிகள், இடர் முகாமைத்துவப் பிரிவிற்கு புகை அடிக்கும் உபகரணங்கள் போன்றவை கையளிக்கப்பட்டன.

இடர் முகாமைத்துவ அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி, உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லா, நெதர்லாந்து தூதுவர் லியேனி குலேநொரா மற்றும் உலக சுகாதார அமைப்பின் பிரதிநிதி கலாநிதி எவ்.ஆர்.மேத்தா உள்ளிட்ட பல பிரமுகர்கள் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர். (ஸ்ரீ)

## பூட்டான் நாடாளுமன்றக்குழு இலங்கை வருகை

பூட்டான் நாடாளுமன்ற குழுவொன்று இலங்கை வரவுள்ளது. இலங்கை வரும் இந்தக் குழு 5 நாள் இலங்கையில் இருக்கும் என அரசாங்கத் தகவல் திணைக்கள இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை வரும் பூட்டான் நாடாளுமன்ற குழு, பிரதமர் மற்றும் சபாநாயகர் ஆகியோரை சந்திக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தவிர அந்தக் குழுவினர் கண்டி மற்றும் அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களுக்கு விஜயம் செய்யவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ)

## ஷெல்காஸ் நிறுவனத்தின் பெயர் மாற்றம்

(கொழும்பு)

ஷெல்காஸ் லங்கா மற்றும் ஷெல் டேர்மினல்ஸ் நிறுவனத்தின் 51 சதவீத பங்குகளை இலங்கை அரசாங்கம் வாங்குவதற்கான ஒப்பந்தம் நேற்று காலை கையெழுத்திடப்பட்டது. இப்பங்குகளை 63 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு இலங்கை அரசாங்கம் வாங்கியுள்ளது.

அதேவேளை , இந்நிறுவனத்தின் பெயர் லித்ரோ என மாற்றப்படவுள்ளது. இந்நிறுவனத்தின் தலைவராக காமினி செனரத் நியமிக்கப்படவுள்ளதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஸ்ரீ)

# ஆயுத வர்த்தகர்களே சட்டவிரோத ஆட்கடத்தல்களில் ஈடுபடுகின்றனர்

## கனடா குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கையில் யுத்த காலத்தின் போது ஆயுத வர்த்தகத்தில் ஈடுபட்டவர்களே தற்போது சட்டவிரோதக் குடியேற்றவாசிகளை நாடு கடத்தும் நடவடிக்கைகளை மேற் கொள்வதாகக் கனடா தெரிவித்துள்ளது.

இலங்கையில் யுத்தம் நிறைவடைந்துள்ளதால் அவர்கள் இதனை வியாபாரமாக ஆரம்பித்துள்ளதாகக் கனடாவின் குடிவரவுத்துறை அமைச்சர் ஜேசன் கென்னி தெரிவித்தார்.

பொதுமக்களிடமிருந்து பிரயாணக் கட்டணத்தில் 10 வீதத்தினை முதற் கட்டமாகப் பெற்றுக்கொண்டு மீதித் தொகையை உரிய நாட்டைச் சென்றடைந்ததன் பின்னர் தருமாறு இந்த கடத்தல்காரர்கள் கூறுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் குறிப்பிட்ட நாட்டுக்குச் சென்றதும் மீதிப் பணத்தை அவர்களால் செலுத்த முடியாமல் போகும் பட்சத்தில் அவர்களைக் குற்றச் செயல்களை மேற்கொள்வதற்கு இந்தக் கடத்தல்காரர்கள் பயன்படுத்துவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை கனடாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சட்டவிரோதக் குடியேற்றவாசிகள் தொடர்பில் சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆட்சேபங்களைத் தாம் நிராகரிப்பதாகவும் கனேடிய அமைச்சர் குறிப்பிட்டதாகச் சர்வதேச ஊடகங்கள் குறிப்பிடுகின்றன.

சர்வதேச குடிவரவுச் சட்டத்தின் பிரகாரம் சட்டவிரோதக் குடியேற்றவாசிகளைத் தடுத்து வைக்கும் உரிமை அரசாங்கத்துக்குள்ளது எனக் கனேடிய அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் இலங்கையில் யுத்தம் நிறைவடைந்ததை அடுத்து இந்தியாவின் தமிழ் நாட்டில் உள்ள சுமார் ஒரு இலட்சம் இலங்கை அகதிகள் நாடு திரும்பிவருவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

தென்கிழக்காசிய நாடுகளில் தற்காலிகமாகத் தங்கியுள்ள இலங்கையர்களை மீண்டும் நாட்டுக்கு அழைத்து வருவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதாக ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்திருந்ததையும் கனேடிய அமைச்சர் நினைவுபடுத்தினார்.

கனடாவில் புகலிடத் தஞ்சம் கோரியுள்ள இலங்கையர்கள் சுற்றுலாப் பயணிகளாக இலங்கைக்குத் திரும்பிவருவதாக ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையம்

பத்திரிகையியலுக்கான அடிப்படைப் பயிற்சி
(30 மணித்தியாலங்கள்)

**பயிற்சியாளர் :** ∴பியானோ பார்ட்டன் (இங்கிலாந்து)

**பயிற்சிக் கட்டணம் :** இலவசம்

**பயிற்சிக் காலம் :** 30 மணித்தியாலங்கள்



**ஆரம்பம் :** 06.11.2010 மாலை 4.00 மணி (ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில் தினமும் மாலை 4.00 மணி தொடக்கம் 6.00 மணி வரை பயிற்சி நடைபெறும்)

ஆர்வமுடையவர்கள் அனைவரும் பங்குபற்றலாம்.

**பதிவுகளை மேற்கொள்வதற்கு**

Media Resources & Training Centre (University of Jaffna)

இல. 84, ஜும்மா பள்ளிவாசல்
ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

021-2229873



முதலில் பதிவுகளை மேற்கொள்ளும் 50 பேருக்கு மட்டும் அனுமதிகள் வரையறுக்கப்பட்டுள்ளது.

**பதிவாளர்**
**03.11.2010**


# போட்டிப் பரீட்சையில் குறைந்த புள்ளிகளை பெற்றோரும் அழகியற்கலை ஆசிரியராக வாய்ப்பு

(கொழும்பு)

அழகியற்கலை ஆசிரியர்களைச் சேர்த்துக் கொள்ள நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் குறைந்த புள்ளிகளைப் பெற்றுக்கொண்டவர்களையும் நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பதற்குக் கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது.

பரீட்சைக்குத் தோற்றியவர்களில் பெரும்பாலானோர் கல்வியமைச்சு எதிர்பார்க்கும் தகைமைகளைக் கொண்டிருக்காமையே இதற்குக் காரணமென அமைச்சின் செயலாளர் சுனில் சிறிசேன தெரிவித்தார்.

இதற்கமைய பரீட்சையில் 40 புள்ளிகளுக்கும் குறைவாகப் பெற்றவர்களையும் நேர்முகப்பரீட்சைக்கு அழைப்பதற்கு அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கு அமைச்சு தீர்மானித்துள்ளதாக அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

கடந்த 15ஆம் திகதி முதல் நடைபெற்ற பரீட்சைக்குத் தோற்றியவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ)

# பாதுகாப்பற்ற பிள்ளைகள் தொடர்பாக சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை ஆராய்வு

(கொழும்பு)

பிள்ளைகள் எத்தகைய காரணங்களால் பாதுகாப்பற்றவர்களாக மாறுகின்றனர் என்பதை ஆராய்வதற்கு சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தீர்மானித்துள்ளது.

பொலனறுவை, மெதிரிகிரிய பகுதியில் இந்த ஆய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக அதிகார சபையின் தலைவர் சட்டத்தரணி அனோமா திஸாநாயக்க தெரிவித்தார்.

பல்வேறு காரணங்களால் பாதுகாப்பற்ற பிள்ளைகளும் சிறுவர் துஷ்பிரயோகமும் அதிகளவில் காணப்படும் பிரதேசமாக மெதிரிகிரியப் பகுதி இனம் காணப்பட்டுள்ளமையால் ஆய்வுக்கென இப்பகுதியை தெரிவு செய்ததாக அவர் தெரிவித்தார்.

இங்கு மேற்கொள்ளப்படும் ஆய்வுகளில் கிடைக்கும் தகவல்களுக்கு அமைய ஏனைய பகுதிகளிலும் பாதுகாப்பற்ற பிள்ளைகளின் பிரச்சினைகளுக்கு தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்க எண்ணியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ)



யா/இந்து ஆரம்ப பாடசாலையின் முன்னாள் அதிபர் வே.ஞானகாந்தனின் பிரிவுபசார நிகழ்வு நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் முன்னாள் அதிபர் வே.ஞானகாந்தன் மங்கல விளக்கேற்றுவதையும் தற்போதைய அதிபர் சு.தியாகலிங்கம் உரையாற்றுவதையும்,நிகழ்வில் கலந்துகொண்ட மாணவிகளையும் படங்களில் காணலாம். (படங்கள்:-எஸ்.கரன்)

## சிறைச்சாலைக்கு கைத்தொலைபேசியை மறைத்து கொண்டு சென்றவர் கைது

(பொரள்ளை)

மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலி சந்தேக நபருக்கு கையடக்கத் தொலைபேசி, மூன்று சிம் அட்டைகள், ஒரு பற்றரி சார்ஜர் என்பவற்றை உணவுப் பொதியில் மறைத்து வைத்து கொண்டு சென்ற பெண் ஒருவர் நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டதாக பொரளை பொலிஸார் தெரிவித்துள்ளனர். உணவை கொண்டுசென்ற ஐஸ்கிறீம் பெட்டியில் இவை மறைத்து வைத்து கொண்டு செல்லப்பட்டுள்ளன.

தொலைபேசி உட்பட அனைத்து உபகரணங்களும் தனித்தனியாகப் பொதி செய்யப்பட்டு பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்ததாக பொலிஸார் கூறியுள்ளனர்.

உணவுப் பொதியை சிறை அதிகாரிகள் சோதனையிட்டபோதே இந்த விடயம் தெரிய வந்துள்ளது. இதனையடுத்து பொரளை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதும் அவர்கள் இந்தப் பெண்ணைக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட பெண் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் எனவும் மகசின் சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள புலிச் சந்தேக நபர் ஒருவரின் உறவினர் ஒருவர் எனவும் தெரிய வந்துள்ளது. கைது செய்யப்பட்ட பெண் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார். (ஸ்ரீ-2)

## சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று பதுளை-கொழும்பு வீதியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பல்கலைக்கழக மாணவர்களின் கைது குறித்துத் தமது எதிர்ப்பைத் தெரிவிக்கும் முகமாகவே இவர்கள் இவ்வாறு ஆர்ப்பாட் டத்தில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

## நெடுந்தீவு கடலில் தத்தளித்த இந்திய மீனவர்கள் மீட்பு

நெடுந்தீவிலிருந்து வடமேற்குக் கடற்பரப்பில் தத்தளித்துக் கொண்டிருந்த இந்திய மீனவர்கள் பதினொரு பேரை கடற்படையினர் மீட்டதாக கடற்படையின் பேச்சாளர் கப்டன் அதுல செனரத் தெரிவித்தார்

குறித்த மீனவர்கள் பயணித்துக் கொண்டிருந்த மூன்று படகுகளின் என்ஜின்கள் செயலிழந்த நிலையில் அவர்கள் நடுக்கட லில் தத்தளித்த போதே கடற்படையினரால் மீட்கப்பட்டதாகவும் அவர்களது படகுகள் கடற்படையினரால் இழுத்துச் செல்லப்பட்டு நெடுந்தீவில் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் கடற்படை பேச்சாளர் கூறினார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற இந்தச் சம்பவத்தை அடுத்து குறித்த மீனவர்கள் பயணித்த படகுகள் கடற்படையினரால் திருத்தப்பட்டு வருவதாகவும் இது தொடர்பில் இந்திய உயர்ஸ்தானிகராலயத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (ஸ்ரீ

## ரிசானாவை காப்பாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்

### சர்வதேச மனித உரிமை காண்காணிப்பகம் வலியுறுத்தல்

மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள இலங்கையைச் சேர்ந்த முஸ்லிம் பணிப்பெண் ரிசானா நபீக் தொடர்பில் சவுதியில் உள்ள இலங்கை தூதரகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் சவுதி அரேபிய மன்னரை தூதரக அதிகாரிகள் சந்திக்க வேண் டும் என ஆசிய மனித உரிமைகள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது. இந்த வலியூறுத்த லூடான கடிதம் ஒன்றை சவுதியில் உள்ள இலங்கை தூதுவருக்கு அனுப்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ரிசானா நபீக்கின் மரண தண்டனை அண்மையில் சவுதி உயர் நீதிமன்றத்தினால் உறுதி செய்யப்பட்டது. இதனை அடுத்து அவரை விடுவிப்பதற்காக பல்வேறு பிரார்த்தனைகள் நடைபெற்று வருகின்றன.

இது தொடர்பில் சவுதி மன்னருக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் கடிதம் ஒன்றை அனுப்பி இருந்தாக அரசாங்க தகவல் கள் தெரிவிக்கின்றன.

கடந்த 2005ல் குழந்தை ஒன்றை கொலை செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் இடம்பெற்ற போது ரிசானா நபீக்குக்கு 17 வயதாகும் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரி பெசில் பெர்ணான்டோ சவுதியில் உள்ள இலங்கை அதிகாரிகளை நபீக்கை விடுதலை செய்வது தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார். முன்னதாக ரிசானா நபீக்கிற்கான வழக்கறிஞருக்கான அனுசாரணையை யும் ஆசிய மனித உரிமைகள் ஆணைக் குழுவே வழங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ)

## சூதாட்ட மையங்களை சட்டரீதியானதாக மாற்றுவதற்கு அரசாங்கம் முனைப்பு

### ஐ.தே.க. குற்றச்சாட்டு

(கொழும்பு)

சூதாட்ட மையங்களை சட்ட ரீதியானதாக மாற்றுவதற்கு அரசாங்கம் முனைப்புக் காட்டி வருவதாக ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

அரசாங்கம் போதியளவு வருமானத்தை ஈட்டிக்கொள்ளும் நோக்கில் சூதாட்ட மையங்கள் தொடர்பான சட்டங்களை தளர்த்துவதற்கு உத்தேசித்துள்ளது.

கலாசார, சமூக மற்றும் சமய காரணிகளை புறந்தள்ளி இந்த சூதாட்ட மையங்கள் அமைக்கப்படக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

சூதாட்ட மையங்களை அமைப்பது குறித்த சட்ட மூலத்தை அரசாங்கம் எதிர் வரும் வாரமளவில் பாராளுமன்றில் சமர்ப்பிக்கவுள்ளதாகவும் உத்தேச சட்டத்தின் மூலம் சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு சூதாட்ட மையங்களை அமைப்பதற்கான அனுமதியினை வழங்கும் பூரண அதிகாரம் வழங்கப்பட உள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதன்படி குறிப்பிட்ட அமைச்சரினால் அனுமதி வழங்கப்படும் சகல இடங்களிலும் சூதாட்ட மையங்கள் அமைக்கப்படும் எனவும் அவர் மேலும் கூறினார்.

கடந்த 2006 ஆம் ஆண்டில் இந்தச் சட்ட மூலத்தை நிறைவேற்றிக் கொள்ள முயற்சித்த போதிலும் தற்போதைய அமைச்சர்களான விமல் வீரவன்ச மற்றும் சம்பிக்க ரணவக்க போன்றவர்களை இதனை எதிர்த்ததாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சட்ட மூலம் நிறைவேற்றப்பட்டால் நாட்டின் அநேக பாகங்களில் சூதாட்ட மையங்கள் உருவாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்

சமூக சீரழிவை ஏற்படுத்தக் கூடிய இந்த சூதாட்ட நிலையம் உருவாக்கும் முனைப்பை தடுப்பதற்காக சமயத் தலைவர்கள் குரல் கொடுக்க வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளதுடன் அரசாங்கத்திற்கு தற்போது காணப்படும் பெரும்பான்மை பலத்தினால் இலகுவில் இந்த சட்ட மூலம் நிறைவேற்றப்படும் என்ற போதிலும் இதனால் ஏற்படக் கூடிய விளைவுகள் ஆபத்தானவை எனவும் அவர் கூறினார். (ஸ்ரீ-2)

## பல்கலைக்கழகங்களில் கற்கும் மாணவர்கள் அடக்குமுறைக்கு உட்படுத்தப்படவில்லை

### உயர்கல்வி அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

பல்கலைக்கழக மாணவர்கள் அடக்கு முறைக்கு உட்படுத்தப்படவில்லை என உயர் கல்வி அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

மாணவர்களின் உரிமைகள் மறுக்கப்படுவதாகவும் மாணவர்கள் அடக்கு முறைக்கு உட்படுத்தப்படுவதாகவும் அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் சுமத்தி வரும் குற்றச் சாட்டுக்களில் உண்மையில்லை எனவும் தெரிவித்துள்ளது.

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அப்பாவி மாணவர்களை தமது அரசியல் நோக்கங்களை பூர்த்தி செய்து கொள்வதற்காக பயன்படுத்திக் கொள்கின்றதென சுட்டிக்காட்டியுள்ளது.

மாணவர் ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் குறிப்பிட்ட சிலரின் தனிப்பட்ட தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்காக இந்தப் போராட்டங்கள் நடத்தப்படுவதாக உயர் கல்வி அமைச்சின் செயலாளர் சுனில் ஜயந்த நவரட்ன தெரிவித்துள்ளார்.

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஏனைய மாணவர் அமைப்புக்கள் இயங்குவதனை அனுமதிப்பதில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

## சம்பூரில் சட்டவிரோதமான முறையில் குடியேறியோரை அகற்றுமாறு உத்தரவு

(கொழும்பு)

சம்பூர் பிரதேசத்தில் சட்டவிரோதமான முறையில் குடியேறியவர்களை அகற்றுமாறு கிழக்கு மாகாண ஆளுநர் மொஹான் விஜேவிக்ரம தெரிவித்துள்ளார்.

நிலாவெளி இளங்கனை பிரதேசத்தின் வீதியோரங்களில் பலர் சட்டவிரோதமான முறையில் குடியேறியுள்ளதாகவும் தற்காலிக கூடாரங்களை அமைத்து சிலர் அவற்றில் தங்கியிருப்பதாகவும் இது சட்ட விரோதமானது எனவும் ஆளுநர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறு சட்டவிரோதமான முறையில் தங்கியிருப்போரை அகற்றுமாறு ஆளுநர் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

குறித்த வீதியோரப் பிரதேசங்களில் அரசாங்கம் எந்தவொரு நபருக்கும் காணிகளை வழங்கவில்லை எனவும் இந்தக் காணிகள் பாரிய அபிவிருத்தித்திட்டங்களை மேற்கொள்வதற்காக ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

எனவே சட்டவிரோதமான முறையில் தங்கியிருப்பவர்கள் விரைவில் இடங்களை விட்டு அகற்றப்படுவர் என தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# 18 ஆம் திகதியில் பிறந்த உங்கள் பலன் எப்படி?

18ஆம் திகதியில் பிறந்தவர்கள் இறையருளால் பல நன்மைகள் அடையும் தன்மையைப் பெற்றவர்கள். இவர்கள் பெரும்பாலும் கட்டடம் மற்றும் நிலம் சம்பந்தப்பட்ட அல்லது இயந்திரம் சம்பந்தப்பட்ட துறைகளில் அதிகம் இருப்பார்கள். இவர்களில் பெரும்பாலோர் தாங்கள் ஏற்றமடையும் பொழுது, உடன் இருப்போரை ஏமாற்றியோ அல்லது சூழ்ச்சிகள் செய்தோ தன் நிலையை உயர்த்திக் கொள்ளும் குணம் உடையவர்களாக இருப்பதைக் காணலாம். தெய்வீககுணம் கொண்ட மிக உயரிய எண்களில் இதுவும் ஒன்றான போதும், இதன் தன்மை தெரியாமல் பலர் பல்வகைப்பட்ட செயல்களில் இறங்கி சரிவைக் காண்கிறார்கள். இவர்களின் தொழில் எண் 9; தொழில் நட்பு எண்கள் 3, 6.

இவர்கள் பெரும்பாலும் அரசுக்கு விசுவாசமாகவும் அரசின் இரகசியங்களைக் காப்பவராகவும் இருப்பதைக் காணலாம். சிலர் ஒருபடி மேலே போய் நான் தான் அரசாங்கம் என்ற எண்ணத்தில் செயற்படுவதையும் காணலாம். தொழில் எண் 9 மற்றும் தொழில் நட்பு எண்களான 3, 6இன் ஆதிக்கம் நன்றாக உள்ளவர்கள் மிக உயர்ந்த பதவி மற்றும் பாராட்டுகளும் பட்டங்களும் பெறக்கூடியவர்களாக இருப்பார்கள். 3, 6ஆம் எண்களின் ஆதிக்கம் குறைவாக இருந்தால் அடிக்கடி கருத்து வேறுபாடுகள் தோன்றி, அதன் காரணமாக சர்ச்சையில் சிக்கும் நிலை உண்டாகும். சக ஊழியர்களைப் பணிய வைத்தே காரியம் சாதிக்கும் குணம் அதிகம் காணப்படுவதால், இவர்களை மற்றவர்கள் அதிகம் விரும்பமாட்டார்கள். பிறந்த திகதி எண்களின் ஆதிக்கமும் தொழில் மற்றும் தொழில் நட்பு எண்களின் ஆதிக்கமும் நன்றாக இருந்தால், இறைவனால் அனுப்பப்பட்ட தூதுவரைப்போல, உற்றாரும் உறவினரும் சிறப்பாக வாழ உதவி செய்த வண்ணம் இருப்பார்கள். இவர்கள் செவ்வாய்க் கிழமை தோறும் சொர்ண ஆகர்ஷன வைரவரை தீபம் ஏற்றி வழிபட்டால் மேன்மையும் நன்மையும் கிடைக்கப் பெறலாம்.

இவர்கள் பெரும்பாலும் தலைமுறை தொழில் செய்பவராக இருப்பதைக் காணலாம். ஏற்ற-இறக்கம் இல்லாத நிலையில் தொழில் புரிபவராக இருப்பார்கள். இவர்களுக்கு காலநேரம் தானே மாறிமாறிச் செயற்பட்டு தீமைகள் நடப்பதைத் தவிர்ப்பதால் தான் என்றும் சமமான நிலை ஏற்படுகிறது. தொழிலதிபதி எண்ணும் தொழில் நட்பு எண்ணும் நல்ல ஆதிக்கத்துடன் இருந்தால் மிகப் பெரிய பொருளாதார உயர்வைப் பெறச் செய்துவிடும். பிறந்த திகதி எண்களின் (1,8) ஆதிக்கம் குறைவாக இருந்தால் தொழில் மந்தம், தொழில் மாற்றம் ஏற்பட்டுக் கொண்டே இருக்கும். இவர்கள் எப்போதும் ஏதேனும் ஒரு திட்டத்துடன் செயற்படுபவர்களாகவே இருப்பார்கள். நன்மையோ, தீமையோ-சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டு, அதை வைத்து அடுத்தவர்களைப் பழிவாங்கும் குணமும் இருக்கும். எண் ஆதிக்கம் பெற இவர்கள் செவ்வாய்க் கிழமைதோறும் விஷ்ணு, துர்க்கைக்கு மலர் சாற்றி வழிபாடு செய்து வந்தால் நன்மைகள் கிடைக்கப் பெறுவர்.

இவர்கள் பெரும்பாலும் சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாகவே தொழிலாளர்களாக இருப்பதைக் காணலாம். தெய்வ நம்பிக்கையும் தன்னம்பிக்கையும் குறைவாக இருப்பதே இதற்குக் காரணமாகும். எதற்கெடுத்தாலும் சலித்துக்கொள்ளும் குணம் இருக்கும். பிறரைப் பற்றி நல்ல அபிப்பிராயமும் இருப்பதில்லை. பிறந்த திகதி எண்ணின் ஆதிக்கக்குறை உள்ளதே இதற்குக் காரணம் ஆகும். தொழில் எண் ஆதிக்கம் மட்டும் நன்றாக இருந்து, தொழில் உதவி எண்களின் ஆதிக்கம் சமமாகச் செயற்படுவதே இவர்களின் முன்னேற்றத்தடைக்குக் காரணமாகும். அடிக்கடி தொழில் மாற்றம் அல்லது இடமாற்றம் போன்றவையும் உண்டாகும். இவர்களில் பலர் 36 வயதுக்கு மேலும் சிலர் 45 வயதுக்குமேலும் பலமான முயற்சிக்குப் பின் நல்ல நிலையை அடைந்து விடுவார்கள். இவர்கள் செவ்வாய்க்கிழமைதோறும் பத்ரகாளியை வழிபட்டுவந்தால் நன்மைகள் பெறலாம்.

இவர்களை தெய்வத்தின் அருள் பெற்றவர்கள் என்றே கூற வேண்டும். இவர்கள் எந்த வேலை செய்தாலும் இறைவனின் ஆசி இயற்கையாகவே கிடைக்கப் பெறுவதால் எதிலும் வெற்றி பெறுவார்கள். இவர்களின் தொழில் மற்றும் குடும்ப வாழ்க்கையில் இறைவனின் பங்கு நிறைந்திருக்கும். தொழில் எண் 9 மற்றும் தொழில் உதவி எண்களான 3, 6இன் ஆதிக்கம் நிறைய பெற்றுள்ளதால், வாழ்வின் கடைசி வரை நல்ல வாழ்க்கை வாழும் சிறந்த அமைப்பைப் பெற்றுள்ளார்கள். பிறந்த திகதி எண்களான 1, 8இன் ஆதிக்கம் பெரும்பாலும் நன்மையைச் செய்த போதிலும், எதிர்வி[illegible] செயல்புரியும்பகை எண்களின் ஆதி[illegible]காலம் வரும்பொழுது, தவறான வழியில் சென்று வாழ்க்கையைக் கேள்விக்குறி ஆக்கிக் கொள்ளும் நிலையும் இருக்கும். தெய்வ பக்தியும் தன்னம்பிக்கையுமே இவர்களை நல்வழிப்படுத்தும். எண்களின் ஆதிக்கம் பெற செவ்வாய்க்கிழமை தோறும் நரசிங்கப் பெருமாளைத் தரிசித்து வந்தால் நன்மைகள் கிடைக்கப் பெறலாம்.

பிறந்த திகதி எண் 18, விதி எண் 1ஆக உள்ளவர்களுக்கு வாழ்நாளில் மிக அதிகபட்சமாக 24 ஆண்டுகள் சிறப்பான பலன்களைச் செய்யும். பிறந்த திகதி 18, விதி எண் 2ஆக உள்ளவர்களுக்கு 9 ஆண்டுகளும், பின் 2 அல்லது 3 ஆண்டுகள் இடைவெளி விட்டு மீண்டும் 9 ஆண்டுகளும் சிறப்பான பலன்களைச் செய்யும். பிறந்த திகதி 18, விதி எண் 3ஆக உள்ளவர்களுக்கு 16 ஆண்டுகள் முதல் 21 ஆண்டுகள் வரை நன்மையான பலன்களைச் செய்யும். பிறந்த திகதி 18, விதி எண் 4ஆக உள்ளவர்களுக்கு 27 ஆண்டுகள் சிறப்பான பலன்களைச் செய்யும். பிறந்த திகதி 18, விதி எண் 5ஆக உள்ளவர்களுக்கு 27 முதல் 30 ஆண்டுகள் வரை மிகச் சிறப்பான பலன்களைக் கொடுக்கும். பிறந்த திகதி 18, விதி எண் 6ஆக உள்ளவர்களுக்கு 24 ஆண்டுகள் முதல் 27 ஆண்டுகள் வரை நன்மையான பலன்களைச் செய்யும். பிறந்த திகதி 18, விதி எண் 7ஆக உள்ளவர்களுக்கு குறைந்தபட்சமாக 16 ஆண்டுகளும் அதிகபட்சமாக 21 ஆண்டுகளும் நன்மைகளைச் செய்யும். பிறந்த திகதி 18, விதி எண் 8ஆக உள்ளவர்களுக்கு அதிகபட்சமாக 33 ஆண்டுகளும் குறைந்தபட்சமாக 17 ஆண்டுகளும் நற்பலனைச் செய்யும். பிறந்த திகதி 18, விதி எண் 9ஆக உள்ளவர்களுக்கு குறைந்தபட்சம் 14 ஆண்டுகளும் அதிகபட்சமாக வாழ்நாள் முழுவதும் (36 வயதுக்கு மேல்) நன்மையான பலன்களைச் செய்யும்.

குறிப்பு :- பிறந்த திகதி எண், விதி எண், தொழில் எண், நன்மை செய்யும் எண் ஆகியவற்றின் ஆதிக்கத்தைப் பொறுத்து தொழில் நிலைகள் மாறுபடும்.

எஸ்.என்.ஹிரிஜி

(தொடரும்)

## பல்கலைக்கழகங்களில் மார்ஷல் முறைமையினை மீண்டும் நடைமுறைப்படுத்துவதற்கு தீர்மானம்

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களின் ஒழுக்கத்தினைப் பாதுகாப்பதற்காக ஏற்கனவே இருந்த மார்ஷல் முறைமையினை மீண்டும் நடைமுறைப்படுத்த உயர்கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்நிலையில் பல்கலைக் கழகங்களின் ஒழுக்கம் மற்றும் பாதுகாப்பு போன்றவற்றை பேணிப் பாதுகாப்பதற்கான பொறுப்பு மார்ஷல்மார்களுக்கு ஒப்படைக்க உயர்கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இந்த மார்ஷல் முறையினை நடைமுறைப்படுத்துவதன் மூலம் தனியார் பாதுகாப்பு பிரிவுகளை குறித்த பல்கலைக் கழகங்களிலிருந்து நீக்கவும் மேற்படி அமைச்சினால் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஸ்ரீ-2)

## உருளைக்கிழங்கு, பெரியவெங்காயத்தின் இறக்குமதி வரிகள் குறைப்பு

உருளைக்கிழங்கினதும் பெரிய வெங்காயத்தினதும் இறக்குமதி வரி உடன் அமுலுக்கு வரும் வகையில் குறைக்கப்பட்டுள்ளது. உருளைக்கிழங்கு ஒரு கிலோ கிராமிற் கான இறக்குமதி வரியை 20 ரூபாவாலும் பெரிய வெங்காயம் ஒரு கிலோ கிராமிற்கான இறக்குமதி வரியை 15 ரூபாவாலும் அர சாங்கம் குறைத்துள்ளது.

பண்டிகை காலத்தை முன்னிட்டு சகல அத்தியாவசியப் பொருட்களையும் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்கள் (ச.தொ.ச) ஊடாக குறைந்த விலையில் சந்தைப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அவ்வாறு சந்தைப்படுத்தப்படும் பொருட்களை ச.தொ.ச. மூலம் மக்களுக்கு போதிய அளவில்பெற்றுக்கொடுக்கஉரியநடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன் பண்டிகை காலத்தை காரணம் காட்டி அரிசி விலையை அதிகரிக்க வர்த்தகர்கள் முயலுவார்களேயானால் அரிசிக்கு மீண்டும் கட்டுப்பாட்டு விலையை விதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இரண்டு இலட்சத்து 500 மெற்றிக்தொன் நெல் கையிருப்பில் உள்ளதால் தேவையான போது அவற்றை மக்களுக்கு அரசியாக்கி குறைந்த விலையில் விற்பதற்கும் பின் நிற்கப்போவதில்லை எனவும் அமைச்சு தெரிவித்துள்ளது. (ஸ்ரீ-2)

## எஞ்சியிருக்கும் புலி உறுப்பினர்கள் தமிழகத்தை இரகசிய தளமாக பயன்படுத்தும் சாத்தியம்

### இந்திய மேலதிக சட்டமா அதிபர் எச்சரிக்கை

(கொழும்பு)

புலிகள் அமைப்பில் எஞ்சி இருக்கும் உறுப்பினர்களால் இந்தியாவின் அதி முக்கியமானவர்களின் உயிர்களுக்கு அச்சுறுத்தல் உள்ளதாகவும் அதேவேளை அவர் கள் தமிழ் நாட்டில் மீண்டும் ஒன்றிணைந்து செயற்படுவதற்கான சாத்தியங்கள் இருப்பதாக இந்தியா தெரிவித்துள்ளது.

புலிகள் இயக்கத்தின் எஞ்சியிருக்கும் உறுப்பினர்கள் இந்தியாவை குறிப்பாகத் தமிழகத்தை மீண்டும் ஒன்று சேர்ப்பதற்கான இரகசியத் தளமாகப் பயன்படுத்துவதற்கான சாத்தியங்களைப் புறந்தள்ளிவிட முடியாது என்று இந்திய மேலதிக சட்டமா அதிபர் அமர்ஜித் சிங் சந்தியோக் தெரிவித்தார்.

புலிகள் அமைப்பு மீதான தடையை நீடிப்பது தொடர்பில் விசாரணை நடத்தி வரும் தனிநபர் தீர்ப்பாயம் முன்பாக அவர் நேற்று முன்தினம் அரச தரப்பு வாதங்களை முன் வைத்தார்.

தடையை மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடிப்பதற்குப் போதிய காரணங்கள் இருக்கின்றன என அவர் தீர்ப்பாயத்தின் முன்னால் தெரிவித்தார்.

புலிகள் அமைப்பிற்கு எதிராக இந்தியா கொண்டிருந்த கொள்கைக்கு எதிராக அந்த அமைப்பின் தலைவர்கள், ஆதரவாளர்கள், அனுதாபிகள் தெரிவித்த கருத்துக்களை அவர் வாசித்துக் காட்டினார்.

புலிகள் அமைப்புக்கு பல்வேறு குழுக்களும் தமது ஆதரவை அதிகப்படுத்தி பொதுக் கூட்டங்களையும் ஆர்ப்பாட்டங்களையும் நடத்துவது இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கும் இறைமைக்கும் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாக அமைகின்றது என்றும் மேலதிக சட்டமா அதிபர் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

## தீபாவளிப் பண்டிகையை முன்னிட்ட நிகழ்வு

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தினால் தீபாவளிப் பண்டிகையை முன்னிட்ட நிகழ்வுகள் நாளை வெள்ளிக்கிழமை பிற் பகல் 3 மணிக்கு பெண்கள் இல்ல ஆராதனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் தலைவர் சோ. பத்மநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், சிறப்பு விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் ஆகியோர் கலந்து கொள்ள வுள்ளனர். இத்துடன் கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளது. (ஸ்ரீ-2)

# வலம்புரியில் வெளியான செய்திக்கு வலயக்கல்விப் பணிப்பாளர் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிக் கல்வி வலயத்துக்கு உட்பட்ட மருதங்கேணிப் பகுதியில் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ள பாடசாலைகள் தறப்பாள் கொட்டகையில் இயங்கவில்லை என வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜா அறிவித்துள்ளார்.

கடந்த 28ஆம் திகதி வலம்புரியில் வெளியான *அடிப்படை வசதிகளின்றி இயங்கும் பாடசாலைகள்* எனும் செய்திக்கு பதிலளிக்கும் வகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்,

மீள் குடியேற்றம் நிகழ்கின்ற மருதங்கேணிப் பிரதேசத்தில் தற்பொழுது 7பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இப்பாடசாலைகளுக்கு தேவையான மாணவர் தளபாடங்கள் பருத்தித்துறையில் இருந்து A 9 வீதியூடாக மருதங்கேணிப் பிரதேசத்திற்கு கொண்டு செல்லப்பட்டு 7 பாடசாலைகளின் மாணவர் தொகைக்கு ஏற்ப பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

பாடசாலைகளின் நிர்வாக செயற்பாடுகளுக்கு தேவையான அலுமாரி, அதிபர் மேசை, கதிரை, ஆசிரியர் கதிரை என்பன 7 பாடசாலைகளுக்கும் தர உள்ளிட்டு நிதி மூலம் வழங்கப்பட்டுள்ளதுடன் மாணவர்களின் கற்பித்தலுக்கு உதவியாக எல்லா பாடசாலை களுக்கும் Green Board, White Board என்பன வழங்கப்பட் டுள்ளன.

பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் கல்விக்கான உணவு செயற்றிட்டத்திற்கு தேவையான உணவுப்பொருட்களும் உணவல்லாத பொருட்களும் 7 பாடசாலைகளுக்கும் வழங்கப்பட்டு மேற்படி செயற்றிட்டம் வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டு வருகின்றது. மேலும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஒதுக்கீட்டின் மூலம் மாணவர்களுக்கு வாரத்தில் இரு நாட்கள் முட்டை வழங்கப்படுகின்றது. மீனவர் சங்கங்களின் உதவியுடன் வாரத்தில் ஒரு நாள் மதிய உணவுடன் மீன் வழங்கப்படுகின்றது.

மாணவர்களின் கற்றலுக்கு உதவியாக 5 பாடசாலைகளில் வடக்கின் அவசர புனரமைப்புத் திட்டத்தின் (ENReP) கீழ் திருத்த வேலைகள் வேகமாக நடைபெற்று வருகின்றன.

மேலும் யா/தாழையடி றோ.க.த.க.பாடசாலை, யா/மாமுனை அ.த.க. பாடசாலைகளில் யுனிசெப் உதவியுடன் தற்காலிக கொட்டகைகள், குடிநீர், சுகாதார வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

யா/மாமுனை அ.த.க. பாடசாலை ,யா/உடுத்துறை மகா வித்தியாலயம், யா/மருதங்கேணி இ.த.க.பாடசாலை,யா/ஆழியவளை சீ.சீ.த.க.க பாடசாலை ஆகிய பாடசாலைகளில் செட்டிகுளம் இடைத்தங்கல் முகாமில் இருந்து கொண்டுவரப்பட்ட 100X40 நீளமான கொட்டகைகள் அமைக்கப்பட்டு வகுப்பறைகள் நடாத்தப்பட்டு வருகின்றன.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத்திட்ட ஒதுக்கீடு மூலம் கிடைக்கப்பெற்ற ரூபா. 850000.00 நிதியை கொண்டு பாடசாலை மாணவர்களுக்கு தளபாடங்கள் வழங்குவதற்கு விரைவான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றன.

713 மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளுக்காக இதுவரை 55 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஆசிரிய ஆளணி உடனுக்குடன் எம்மால் வழங்கப்படுகின்றன.

இப்பாடசாலைகளுக்கு பொருட்களை கொண்டுசெல்வதில் பெரும் இடர்களை நாம் சுமக்க வேண்டியுள்ளது. மருதங்கேணிப்பாலம் சேதமடைந்துள்ளமையால் பொருட்களை பாலத்திற்கப்பால் கொண்டு செல்வதில் பெருமளவு பணவிரயமும் நேரவியமும் ஏற்படுகின்றது.

மருதங்கேணி கோட்டகல்வி அதிகாரி இச்செயற்பாடுகளை மிகுந்த வேலைப்பளுவின் மத்தியில் கடமை உணர்வுடன் செய்துகொண்டு வருகின்றார் என்று தெரிவித்துள்ளார். (ஸ்ரீ)

# புலிகளின் புனர்வாழ்வு திட்டங்களுக்காக அனுப்பப்பட்ட நிதி குறித்து விசாரணை

தமிழீழ விடுதலைப் புலிகளின் புனர்வாழ்வுத் திட்டங்களுக்கானவை எனக்கூறி இலங்கைக்கு அனுப்பப்பட்ட நிதிகள் எங்கிருந்து கிடைத்தன என்பது குறித்தும் அவை செலவிடப்பட்ட விதம் குறித்தும் விசாரணை நடத்தப்படுவதாக குற்றப்புலனாய்வுப் பிரிவினர் நேற்று முன்தினம் கொழும்பு நீதவான் நீதிமன்றக்குத் தெரிவித்தனர்.

சந்தேக நபர் ஒருவரை மேலதிக விசாரணைகளுக்காக குற்றப் புலனாய்வுப் பிரிவில் தடுத்து வைப்பதற்காக கொழும்பு பிரதம நீதவான் ரஷ்மி சிங்கப்புலி முன்னிலையில் ஆஜர்படுத்தியபோதே குற்றப்புலனாய்வுப் பிரிவினர் இத்தகவலை வெளியிட்டனர். முத்தையாபிள்ளை விக்னேஸ்வரன் என்பவர் தமிழீழ விடுதலைப் புலிகளின் அங்கத்தவர் எனவும் விமான நிலைய பாதுகாப்புப் பிரிவினரால் அவர் கைது செய்யப்பட்ட தாகவும் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர்.

சந்தேக நபரை தடுத்து வைக்க உத்தரவிட்ட நீதவான் இது தொடர்பான அறிக்கையை நவம்பர் 16 ஆம் திகதி நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு உத்தரவிட்டார். (ஸ்ரீ-2)

2010.11 04


# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1333 - ஆர்னோ ஆறு பெருக்கெடுத்து வெள்ளம் பரவியதில் இத்தாலியின் புளோரென்ஸ் நகரில் பெரும் சேதம் ஏற்பட்டது.
- 1576 - ஸ்பானியப் படைகள் பெல்ஜியத்தின் ஆண்ட்வேர்ப் நகரை கைப்பற்றின. மூன்று நாட்களில் இந்நகரம் பெரிதும் சேதப்படுத்தப்பட்டது.
- 1861 - வோஷிங்டன் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது.
- 1869 - அறிவியல் இதழ் நேச்சர் முதற்தடவையாக வெளியிடப்பட்டது.
- 1914 - பிரித்தானியாவும் பிரான்சும் துருக்கியுடன் போரை அறிவித்தன.
- 1918 - முதலாம் உலகப் போர்: இத்தாலியிடம் ஆஸ்திரியா-ஹங்கேரி அரசு சரணடைந்தது.
- 1918 - 40ஆயிரம் கடற்படையினர் கீல் துறைமுகத்தைக் கைப்பற்றியதை அடுத்து ஜெர்மனியப் புரட்சி தொடங்கியது.
- 1921 - ஜப்பானியப் பிரதமர் ஹரா தக்காஷி டோக்கியோவில் சுட்டுக்கொல்லப்பட்டார்.
- 1956 - ஒக்டோபர் 23 இல் ஆரம்பமான ஹங்கேரியப் புரட்சியை முறியடிக்க சோவியத் படைகள் ஹங்கேரியை முற்றுகையிட்டன. ஆயிரக்கணக்கான ஹங்கேரியர்கள் கொல்லப்பட்டு இலட்சக்கணக்கானோர் நாட்டை விட்டு வெளியேறினர்.
- 1966 - இத்தாலியின் புளோரென்ஸ் நகரத் தின் மூன்றில் இரண்டு பகுதி வெள்ளப் பெருக்கில் அழிந்தது. 113 பேர் கொல்லப்பட்டனர். பல பெறுமதியான ஓவியங்களும் நூல்களும் அழிந்தன.
- 1979 - ஈரானியத் தீவிரவாதிகள் டெஹ்ரானில் அமெரிக்கத் தூதராலயத்தை முற்றுகையிட்டு 53 அமெரிக்கர்கள் உட்பட 90 பேரை பணயக் கைதிகளாகப் பிடித்தனர்.
- 1984 - நிக்கராகுவாவில் இடம்பெற்ற தேர்தல்களில் சண்டினீஸ்டா முன்னணி வெற்றி பெற்றது.
- 1995 - இஸ்ரேலியப் பிரதமர் இட்சாக் ரபீன் தீவிரவாத வலதுசாரி இஸ்ரேலியரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.
- 2004 - ஐவரி கோஸ்டில் இடம்பெற்ற உள்நாட்டுப் போரில் 12 பிரெஞ்சுப் படையினர் மற்றும் 3 ஐ.நா கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள் உட்பட நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டனர்.

### இறப்புகள்

- 1988 - ஜேம்ஸ் இரத்தினம், ஈழத்து எழுத்தாளர் (பி.1905)
- 1995 - இட்சாக் ரவீன், இஸ்ரேல் பிரதமர், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1922)

**1967 - தமிழக முன்னாள் முதல்வர், நடிகர் எம்.ஜி ராமச்சந்திரன் (எம்.ஜி.ஆர்) கொலை முயற்சி வழக்கில் நடிகர் எம்.ஆர்.ராதாவுக்கு ஏழு ஆண்டுக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.**



# மூன்று நாட்களாக கட்டிவைத்து 14 வயதுச் சிறுவன் சித்திரவதை

கறுவா தோட்டத்தில் மூன்று நாட்களாக கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில் சித்திரவதை செய்யப்பட்ட 14 வயது சிறுவனை மாத்தறை பொலிஸார் நேற்று முன்தினம் மீட்டனர்.

இச்சிறுவனின் தாயாரின் இரண்டாவது கணவனே இச்சிறுவனைத் துன்புறுத்தியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுவன் தற்போது மாத்தறை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றான். சிறுவனின் உடலில் அடிகாயங்களும் தீக்காயங்களும் காணப்படுவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். பொலிஸாருக்கு சிறுவன் அளித்த வாக்கு மூலத்தில் அம்மா இரண்டாவது தாரமாக மறுமணம் செய்த சிறிய தந்தை தச்சு வேலை செய்கிறார். அவருக்கு உதவி வேலை செய்வதற்காக எனது கல்வியையும் இடை நிறுத்தி விட்டார். அவர் சொல்கின்ற வேலைகளைச் செய்யாவிட்டால் என்னைத் தாக்குவார். துன்புறுத்துவார். தீயினால் சுட்டு காயப்படுத்துவார். பட்டினி போடுவார் என்ற மன ஆதங்கங்களை சிறுவன் கூறினான்.

மூன்று நாட்களாக என்னைக் கட்டி கறுவாத் தோட்டத்தில் வைத்தார். எனது முனங்கல் சத்தத்தை கேட்டவர்கள் பொலிஸாருக்கு தகவல் கொடுத்ததை அடுத்து பொலிஸார் வந்து மீட்டனர்.

சிறுவனை பரிசோதித்த டாக்டர் தடியால் அடித்த தழும்புகளும் தீயினால் சுட்ட காயங்களும் உடலில் இருப்பதாக தெரிவித்தனர்.

இதேவேளை இச் சிறுவன் தன்னை வீட்டுக்கு அனுப்ப வேண்டாமெனவும் பொலிஸாரிடம் கோரிக்கை விடுத்துள்ளான்.

மாத்தறையில் , தெய்யந்தறை பரப்பா முல்லை தெல்கஹகொறட்டுவ என்ற இடத்தில் இச் சம்பவம் இடம்பெற்றது. (ஸ்ரீ-2)

## நாட்காட்டி வெளியீட்டுவிழா

காரைநகர் வாரிவளவு கற்பக விநாயகர் ஆலய 2011 ஆம் ஆண்டிற்கான நாட்காட்டி வெளியீட்டு விழா எதிர்வரும் 7 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

யாழ்.பரமேஸ்வராக் கல்லூரி இயக்குநர் சபையும் காரைநகர் வாரிவளவு கற்பக விநாயகர் ஆலயமும் இணைந்து நடாத்தும் இந்நிகழ்வு பரமேஸ்வராக் கல்லூரி இயக் குநர் சபைத் தலைவர் பேராசிரியர்சி.க. சிற்றம்பலம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினரும் பொன்னம் பலவானேஸ்வரர் ஆலய அறங்காவலருமான டி.எம்.சுவாமிநாதன் கலந்து கொள்ளவுள்ளார். நாட்காட்டியினை யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை தலைவர் கலாநிதி மா.வேதநாதன் வெளியிட்டு வைக்கவுள்ளார். (ஸ்ரீ-246)

# ஈராக்கில் இடம்பெற்ற தொடர் குண்டு வெடிப்பில் 100 பேர் பலி ; 200 இற்கு மேற்பட்டோர் காயம்

(பக்தாதி)

ஈராக் தலைநகர் பக்தாத்தில் அடுத் தடுத்து நடந்த தொடர் குண்டுவெடிப்பில் 100 பேர் பலியாகினர். 200க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்துள்ளனர்.

இதனால் நாடு முழுவதும் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது. ஈராக்கில் மத்திய பக்தாத் உள்ள உணவு விடுதியில் முதல் கார் குண்டு வெடித்ததில் 21 பேர் பலியாகினர். இந்தச் சம்பவம்இலங்கை நேரப்படி மாலை 6.15 மணிக்கு நடந்தது.

பின்பு அல்கானேகியூன் எனும் பகு தியில் குண்டு வெடித்ததில் 5பேர் பலியா கினர்.

அதன் பின்பு பலூஜா என்னும் இடத்தில் நடந்த குண்டுவெடிப்பில் ஒருவர் பலியா னார்.

பக்தாத்தில் கடந்த 31 ஆம்திகதி தேவா லயமொன்றில் நடந்த குண்டுவெடிப்பில் 52 பேர் பலியாகினர்.அதனை தொடர்ந்து நேற்று நடந்த குண்டுவெடிப்பில் 100க்கும் மேற்பட்டோர் பலியானதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனால் பக்தாத் நகரில் ஊரடங்கு உத் தரவு அமுல்படுத்தப்பட்டுள்ளது. குண்டு வெடிப்பு சம்பவத்திற்கு அல் - கொய்தா அமைப்பு காரணம் எனக் கூறப்படுகிறது.


ஈராக்கில் அமெரிக்கப் படைகள் வாபஸ் பெற்றது முதல் தலைநகர் பக்தாத்தில் பாதுகாப்பு கேள்விக்குறியாக உள்ளது. கடந்த 200 நாட்களில் 13 தற்கொலைப் படை தாக்குதல்கள் நடந்துள்ளன. (ஸ்ரீ-2)


## ரஷ்யா–ஜப்பான் உறவுகளில் விரிசல்

ஜப்பானின் வடக்குஎல்லையில் உள்ள குனாஷிர் தீவுக்கு ரஷ்ய ஜனாதிபதி டிமிட்ரி மெத்வதேவ் பயணம் மேற்கொண்டதால் இருதரப்பு உறவிலும் விரிசல் எழுந்துள்ளது.

ஜப்பானின் வடபகுதியில் குரில் என்ற நான்கு தீவுகள் உள்ளன. கடந்த 1945 இல் இரண்டாம் உலகப் போரின் முடிவில் ரஷ்யா இவற்றைக் கைப்பற்றியது. 1956 இல் சமாதான நடவடிக்கையின் போது இரண்டு தீவுகளைத் தர ரஷ்யா முன்வந்தது. ஜப்பான் அதற்கு மறுத்ததால் இன்று வரை இப்பிரச்சனை நீடிக்கிறது.

இந்நிலையில் குரில் தீவுகள் ரஷ்யாவுக்கே சொந்தம் என்பதை வெளிப்படுத்தும் விதத்தில் ரஷ்ய ஜனாதிபதி டிமிட்ரி மெத்வ தேவ் கடந்த முதலாம் திகதி அத்தீவுக்குச் சென்று பார்வையிட்டார்.இது குறித்து ஜப்பான் தனது எதிர்ப்பை வெளியிட்டுள்ளது. (ஸ்ரீ-2)



பிரிட்டனின் தலைநகர் லண்டனில் உள்ள லான்செஸ்டரில் ஆங்கிலோ, பிரெஞ்ச் மாநாடு நடைபெற்றது. இதில் பிரான்ஸ் ஜனாதிபதி நிக்கோலஸ் சர்கோசி (இடது), பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# அவுஸ்திரேலிய ஆழ்கடலில் எரிமலை கண்டுபிடிப்பு

(மெல்போர்ன்)

அவுஸ்திரேலிய ஆழ்கடல் பகுதியில் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக உயிருடன் இருக்கும் எரிமலையை அவுஸ்திரேலிய விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

கிரேட் அவுஸ்திரேலியன் வளைகுடா கடல் ஆய்வு மையம் உள்ள பாதுகாக்கப்பட்ட பகுதியில் இருந்து 100 கடல் மைல் தொலைவில் இரண்டாயிரம் மீற்றர் ஆழத்தில் எரிமலை ஒன்றை அவுஸ்திரேலிய விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

ஆழ்கடல் பகுதியில் கூம்பு வடிவில் உள்ள இந்த எரிமலை 800 மீற்றர் விட்டத்தை கொண்டுள்ளது. இது ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக உயிருடன் இருந்து வருவதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

அந்த பகுதியில் மேலும் இது போன்ற எரிமலைகள் இருக்கலாம் என்றும் கருதப்படுகிறது. (ஸ்ரீ-2)

# கொலராவையடுத்து சூறாவளித்தாக்கம்; ஹெயிட்டியில் மக்கள் பெரும் அவலம்

(போர்ட் ஆப் பிரின்ஸ்)

கொலரா நோயில் சிக்கிய ஹெயிட்டி தீவு அதில் இருந்து இன்னும் மீளாத நிலையில் இன்னும் ஒரு வாரத்திற்குள் அத்தீவை கடுமையான சூறாவளி தாக்கக் கூடும் என அமெரிக்கா எச்சரித்துள்ளது.

இந்தாண்டு ஆரம்பத்தில் கரீபியன் நாடான ஹெயிட்டி தீவில் ஏற்பட்ட கடுமையான நிலநடுக்கத்தால் இரண்டு இலட்சத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இன்றுவரை 13 இலட்சம் பேர் வீடுகளை இழந்து முகாம்களில் வசித்து வருகின்றனர்.

இந்நிலையில் சமீபத்தில் அந்நாட்டை கொலரா நோய் கடுமையாக தாக்கியது. இதுவரை கொலரா நோய்க்கு 330 பேர் பலியாகியுள்ளனர். நோய் தடுப்பு நிவாரணத்தில் பல நாடுகளும் உதவி வருகின்றன. எனினும் நோயின் தாக்கம் இன்னும் குறையவில்லை.

இதற்கிடையில் இன்னும் ஒரு வாரத்தில் டொமஸ் என்ற சூறாவளி ஹெயிட்டி தீவைத் தாக்கக் கூடும் என்று அமெரிக்க வானிலை அலுவலகம் எச்சரித்துள்ளது. கரீபியன் தீவுக் கூட்டங்களின் கிழக்குப் பகுதியை கடந்த வாரம் டொமஸ் தாக்கியதில் 14 பேர் உயிரிழந்துள்ளனர்.

அதிக பட்சம் மணிக்கு 75 கி.மீ. வேகத்தில் வீசும் இச்சூறாவளி ஹெயிட்டி தீவைத் தாக்குவதற்கு முன் அந்நாட்டு மக்களுக்குப் போதுமான சுகாதார மற்றும் தங்கும் வசதி ஏற்படுத்திக் கொடுப்பதில் ஐ.நா.தீவிரமாக முனைந்துள்ளது. (ஸ்ரீ-2)

# ஐ.நா.பாதுகாப்பு கவுன்சிலில் இந்தியாவுக்கு நிரந்தர இடம்கிடைக்க ஆதரவளிக்க வேண்டும்

## ஒபாமாவிடம் கோரிக்கை

(வோஷிங்டன்)

ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் இந்தியாவுக்கு நிரந்தர இடம் கிடைப்பதை அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா உறுத்திப்படுத்த வேண்டும் என்று அமெரிக்க இந்திய வர்த்தக கவுன்சில் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவைக் கேட்டுக் கொண்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் இந்திய வருகைக்கு இன்னும் சில நாட்களே உள்ள நிலையில் அமெரிக்க இந்திய வர்த்தக கவுன்சில் (யு.எஸ்.ஐ.பி.சி) அவரிடம் சில கோரிக்கைகளை முன்வைத்துள்ளது.

இதுகுறித்து அக்கவுன்சில் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதாவது , ஐ.நா. தன் பாதுகாப்பு கவுன்சிலை விரிவாக்கம் செய்வதற்கான முடிவு எடுத்துள்ள வேளையில் இந்தியாவுக்கு அதில் நிரந்த இடம் கிடைப்பதற்கு ஒபாமா ஆதரவளிக்க வேண்டும்.

அமெரிக்காவில் நடக்க உள்ள இடைத் தேர்தல்கள் அவுட்சோர்சிங் குறித்த பயத்தை மீண்டும் எழுப்பியுள்ளன. அதேநேரம் தற்காலிக எச்.1பி. விசா மற்றும் எல்.1விசாவுக் கான கட்டணத்தை உயர்த்தியுள்ளதும் தொழில் துறையில் கவலையை ஏற்படுத்தி யுள்ளது.

நவீன தொழில் நுட்பம் மற்றும் இராணுவ நடவடிக்கைகளை இரு நாடுகளும் பகிர்ந்து கொள்ளும் நிலையில் இந்தியாவை தனக்கு ஆதரவான நாடாக அமெரிக்கா நடத்த வேண்டும்.

தற்போது அந்நிய நேரடி முதலீடு 26 சதவீதம் தான் உள்ளது. இது 74 சதவீதமாக உயர்த்தப்பட வேண்டும் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# போதைப்பொருள் விற்ற 65 பேருக்கு சவுக்கடி

## தலிபான்கள் தண்டனை

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் வடமேற்கு எல்லைப்புற மாநிலத்தில் ஆரக்சாய் பகுதியில் போதைப் பொருள் விற்பதற்கும் அதை பயன்படுத்துவதற்கும் தலிபான்கள் தடை விதித்து இருக்கிறார்கள்.

இதை மீறி போதை பொருள் விற்றதாகவும் பயன்படுத்தியதாகவும் பழங்குடியினர் 65 பேரை பிடித்து ஷரியத் நீதிமன்றத்திற்கு கொண்டு வந்தனர். அங்கு அவர்கள் தடையை மீறியதை ஒப்புக் கொண்டனர். அவர்களுக்கு தலிபான் நீதிமன்றம் தண்டனை வழங்கியது.

இதைத் தொடர்ந்து அவர்கள் ஒரு திடலுக்கு அழைத்து வரப்பட்டனர். அங்கு மக்கள் வேடிக்கை பார்க்க அவர்கள் 65 பேருக்கும் தலா 10 சவுக்கடி வழங்கப்பட்டது. ஆரக்சாய் பகுதியில் பல பகுதிகள் தலிபான்களின் கட்டுப்பாட்டில் இருப்பதாக அந்த பகுதி மக்கள் தெரிவித்தனர். (ஸ்ரீ-2)



இந்தோனேஷியா வந்திருந்த அவுஸ்திரேலிய பிரதமர் ஜூலியா கிலார்டை (இடது), அந்நாட்டு ஜனாதிபதி சுசிலோபாபாங் யூதோயுனோ தலைநகர் ஜகார்த்தாவிலுள்ள அதிபர் மாளிகையில் வரவேற்பதை படத்தில் காணலாம்.

# கிழக்கில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கடனுதவித் திட்டம்

## அரசாங்கம் நடவடிக்கை

(கொழும்பு)

கிழக்கில் யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கடன் உதவி வழங்கும் திட்டம் ஒன்றை அரசாங்கம் ஆரம்பித்துள்ளதுடன் அதற்கான விண்ணப்பங்களை அடுத்த வாரம் விநியோகிக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

இவ்வாறு பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாண மக்களுக்கு குறைந்த வட்டிவீதத்தில் வீட்டுக் கடன் மற்றும் சுயதொழிலில் கடனாக இரண்டரை இலட்சம் ரூபா வழங்கப்படவுள்ளது.

10 வருடத்தில் மீளச் செலுத்தக் கூடிய வகையில் நான்கு வீத வட்டி இந்தக் கடன் வழங்கப்படுவதுடன் யுத்தத்தினால் பாதிப்படைந்த சகலரும் இதற்கு விண்ணப்பிக்க முடியுமெனவும் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை வங்கியுடன் இணைந்து புனர்வாழ்வு அதிகாரசபை இச்செயற்றிடடத்தை முன்னெடுக்கப்பதுடன் அடுத்த வாரத்தில் வீட்டுக்கடன் மற்றும் சுயதொழில் கடனுக்கான விண்ணப்பங்களை விநியோகிக்கத் தீர்மானித்துள்ளதாக புனர்வாழ்வு அதிகார சபையின் பிரதிப் பணிப்பாளர் எஸ்.எம். பதுர்தீன் தெரிவித்தார்.

கிழக்கில் இக் கடன் திட்டம் சம்பந்தமான நடவடிக்கைகள் எதிர்வரும் 12ம்திகதி நடைபெறும் என அவர் குறிப்பிட்டார். (ஸ்ரீ)

# இலங்கை முஸ்லிம்களை பிளவுபடுத்த வெளிநாட்டு அமைப்புக்கள் முயற்சி

## பிரதமர் குற்றச்சாட்டு



(கொழும்பு)

கடும் போக்குடைய வெளிநாட்டு இஸ்லாமிய அமைப்புக்கள் இலங்கை முஸ்லிம்களை பிளவுபடுத்த முயற்சிப்பதாக பிரதமர் டி.எம். ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

கிண்ணியா முஸ்லிம் பள்ளிவாசலில் உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இஸ்லாமியமதம் ஓர் சிரேஷ்ட மதம் எனவும் நீண்டகாலமாக பள்ளிவாசலுக்கும் தமக்கும் தொடர்பு இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் மக்களுக்கு செய்யவேண்டிய கடமைகள் உரிய முறையில் நிறைவேற்றப்படும் என தெரிவித்த அவர் அண்மைக்காலமாக முஸ்லிம் மக்களுக்கு இடையில் சில பிளவுகள் ஏற்பட்டுள்ளதாகவும், வெளிநாட்டு கடும் போக்குடைய இஸ்லாமிய அமைப்புக்களின் தலையீட்டினால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

பிளவவைதானல் எவருக்கும் நன்மை கிட்டப்போவதில்லை எனவும் முஸ்லிம் மக்கள் சூழ்ச்சிகளில் சிக்விடக்குடாது எனவும் பிரச்சினைகளுக்கு பேச்சுவார்த்தைகளின் மூலம் தீர்வு காணப்படவேண்டுமெனவும் அவர் குறிப்பட்டுள்ளார் .(ஸ்ரீ)

# இளம் காதலர்களுக்கென பூங்காக்கள் அமைப்பு

(கொழும்பு)

இளம் காதலர்களுக்காக பூங்காக்கள் அமைக்கப்படவுள்ளதாக தேசிய இளைஞர் சேவைகள் பேரவையின் தலைவர் லலித் பியூம பெரேரா தெரிவித்துள்ளார்.

நாட்டின் ஒன்பது மாகாணங்களில் விசேட பூங்காக்கள் அமைக்கப்படவுள்ளதாகவும் இதில் தியவன்னா ஓயாப் பிரதேசத்தில் காணப்படும் ஏழு ஏக்கர் பரப்பில் மேல் மாகாணத்திற்கான காதலர் பூங்கா உருவாக்கப்படவுள்ளது.

இளம் காதலர்களுக்கு பொலிஸார் உள்ளிட்ட பலர் இடையூறு ஏற்படுத்தி வருவதனால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் இசை நிகழ்வுகள் மற்றும் ஏனைய பொழுது போக்கு அம்சங்களும் இந்த பூங்காவில் காணப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும், காதலர்கள் இந்தப் பூங்காக்களில் ஒழுக்கமாக நடந்துகொள்ள வேண்டுமென்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (ஸ்ரீ-2)

# சந்திரனுக்கு ரோபோவை அனுப்ப நாசா திட்டம்

சந்திரனுக்கு மீண்டும் விஞ்ஞானிகளை அனுப்ப அமெரிக்காவின் நாசா விண்வெளி நிறுவனம் முடிவு செய்திருந்தது. அதற்காக ரூ 7 இலட்சத்து 50 ஆயிரம் கோடி செலவிட முடிவு செய்யப்பட்டிருந்தது. ஆனால் இதற்கு அதிக அளவு செலவாகும் என கருதி அந்நாட்டு அரசு இந்த திட்டத்தை கைவிட்டது.

இந்த நிலையில் சந்திரனுக்கு இயந்திர மனிதனை (ரோபா) அனுப்ப நாசா முடிவு செய்துள்ளது. இதற்காக ரூ ஆயிரம் கோடிக்கும் குறைவாகவே செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த தகவலை ஹீவ்டனில் உள்ள ஜான்சன் விண்வெளி மைய நாசா பொறியியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மனித குணங்களை கொண்ட இயந்திர மனிதனை சந்திரனுக்கு பாதுகாப்பாக அனுப்ப திட்டமிட்டுள்ளதாகவும் அதற்கான பணி மூன்று வருடங்களில் முடியும் என்றும் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ)

# அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தை சேர்ந்த இருவர் கைது

(கொழும்பு)

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தை சேர்ந்த இரண்டு மாணவர்களை தாம் நேற்று கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

களனி பல்கலைக்கழகத்தின் மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் தலைவர் தயான் வீரக்கொடி, ஜனக பண்டார ஆகிய மாணவர் தலைவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் நேற்று அதிகாலை 3.30 மணியளவில் கட்டுநாயக்க எரிவத்தை பகுதியில் சுவரொட்டிகளை ஒட்டிக்கொண்டிருந்த போது கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் உந்துல் பிரேமரட்ன உட்பட கைது செய்யப்பட்டுள்ள 29 மாணவர்களை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தும் சுவரொட்டிகளை இவர்கள் ஒட்டிக்கொண்டிருந்த போதே கைது செய்யப்பட்டுள்ளனர். (ஸ்ரீ)

# கிளிநொச்சி மாவட்ட பொதுவைத்தியசாலையின் சுத்திகரிப்பு பணிகளுக்கு உதவுமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மாவட்ட பொதுவைத்தியசாலை மேம்பாட்டு பேரவையானது வைத்தியசாலை வளாகத்தின் உட்புற, வெளிப்புற பகுதிகளை துப்புரவாக வைத்திருக்கவும் நோயாளர்களின் வைத்திய தேவைகளை இனங்கண்டு அவற்றினை நிறைவேற்றுவதற்கு தொண்டு நிறுவனங்களினதும் கொடை வள்ளல்களினதும்உதவியை நாடியுள்ளது.

இது தொடர்பாக அப்பேரவையினால் விடுக்கப்பட்டுள்ள வேண்டுகோளில்,

மீள் குடியேற்றத்தின் பின்னர் கிளிநொச்சி மாவட்ட பொதுவைத்தியசாலை மீண்டும் தனது பணிகளை ஆரம்பித்து எமது பிரதேச மக்களுக்கு நிறைவாக சேவையினை வழங்கி வருகின்றது.வைத்தியசாலை மேம்பாட்டுபேரவையும் வைத்தியசாலைக்கு தேவையான ஆதரவுப் பணிகளையும், நோயாளர்களுக்கு வேண்டிய தேவைகளைப் பூர்த்தி செய்யும் வேலைத் திட்டங்களை ஆரம்பித்து நடைமுறைப்படுத்தி வருகின்றது.

தற்போது கிளிநொச்சியில் அதிகளவிலான மக்கள் தமது சொந்த இடங்களில் குடியேறியுள்ளதாலும் பருவமழை ஆரம்பித்ததாலும், நாளாந்தம் வைத்தியசாலைக்கு வரும் வெளிநோயாளர் எண்ணிக்கையும், விடுதிகளில் தங்கி நின்று சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

அத்துடன் பல்வேறு நோய்களுக்காக நடாத்தப் படும் கிளினிக்கிலும் நோயாளிகளின் எண் ணிக்கையும் அதிகமாகக் காணப்படுகின் றது.

இந்நோயாளர்களுக்கான தேவைகளைப் பூர்த்தி செய்வதிலும், வைத்தியசாலை உட்புற வெளிப்புற சூழலைச் சுத்தமாக வைத்திருப்பதிலும் வைத்தியசாலையும் மேம்பாட்டுப் பேரவையும் பல்வேறு சிரமங்களை எதிர் கொள்கின்றது.

அத்துடன் விரைவில் வைத்தியசாலையின் இரண்டாம் கட்ட வேலை சீனா அரசின் உதவியுடன் ஆம்பிக்கப்பட வுள்ளது. இந்த வேலையின் போது ஏற் படும் மாசுக்கள் சுத்திகரிப்பு வேலைகளை அதிகரிக்கவுள்ளது.

எனவே சுத்திகரிப்பு பணிகளை இலகுவாக மேற்கொள்ளவும். வைத்தியசாலை சூழலைச் சுத்தமாக வைத்திருக்கவும் சுத்திகரிப்புக்குத் தேவையான பொருட்களைக் கொடை வள்ளல்கள், பரோபகார எண்ணம் கொண்டவர்கள் மனிதநேய எண்ணம் கொண்ட தொண்டு நிறுவனங்கள் ஆகியோரிடமிருந்தும் வைத்தியசாலை மேம்பாட்டுப் பேரவை வேண்டி நிற்கிறது.

உதவி புரியவிரும்புவோாம், பொருளாக வழங்கின் நேடியாக மேம்பாட்டுப் பேரவையிடமும், பணமாக வழங்கின் மக்கள் வங்கி - கிளிநொச்சியிலுள்ள மேம்பாட்டுப் பேரவையின் கணக்கு இலக்கம் 1650060092 மூலமாகவும் வழங்கி உதவுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

தேவையான பொருட்களின் பட்டியல் (மாதமொன்றுக்கு) வருமாறு,


பென்ரோச் பற்றி -50,நடுத்தர பற்றி-25, லைசோல் (Lysozl)-32, மாபிள் கிளீனர்-86, விம் சோப் -100, விம் பவுடர் -100, மொப்பர் -20, வைப்பர் -15, சோப் -110, காபிக்-90, எயார்பிறஷ்ர்(Airfresher) -35, சேபெக் ஷல்1kg -25, தும்புத்தடி -30, சம்போ போத்தல்-15, ரொய்லற் பிறஸ்-40, ரொய்லற் பிறஸ் (பெரிது) -05, கிளாஸ் கிளீனர் -50, லைபோய் சோப் (பெரிது)-50, பைநோல் (Phynol-1L)-15, கைபிறஷ் -10, சேவிங் பிளேட் (பெட்டி)-20, டோச் பற்றி -40, "டஸ்பின்"பாக் -250, சேவிங் செட் -05, டெற்றோல் 300Ml-05, றபர் சீற் (M) -10, மினறல் வோட்டர் 5l-10 (ஸ்ரீ-2)



வலிகாமம் கல்வி வலயத்திற்கு உட்பட்ட தெல்லிப்பழை கோட்டப் பாடசாலைகளில் பெற்றோரை இழந்து நலிவுற்ற மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக யாழ். எயிட் நிறுவனத்தினால் காலணிகளும் கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. தெல்லிப்பழை கல்விக் கோட்டப் பணிப்பாளர் எஸ்.கைலாசநாதன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் திட்ட இணைப்பாளர் பார்த்தீபன் மாணவி ஒருவருக்கு உதவிப் பொருட்கள் வழங்குவதையும் உதவிப் பொருட்களைப் பெற்ற மாணவர்கள் கோட்டக்கல்விப் பணிப்பாளர் , யாழ். எயிட் திட்ட இணைப்பாளர் வ.பார்த்தீபன், திட்ட அலுவலர் திருமதி ர.தர்மினி பாடசாலை ஆசிரியர்கள் ஆகியோருடன் காணப்படுவதையும் படங்களில் காணலாம்.

# இணையப் பக்கங்களை பி.டி.எப். ஆக மாற்ற...

பல வேளைகளில், நாம் பார்க்கும் இணையப் பக்கங்களை, அவை தரும் தகவல்களுக்காக, சேவ் செய்திட விரும்பு வோம்.




அனைத்து பிரவுசர்களும் இதற்கான வசதியைத் தருகின்றன. பிரவுசரின் எடிட் மெனுவில் கிளிக்செய்து கிடைக்கும் மெனு வில் சேவ் அல்லது சேவ் ஆஸ் தேர்ந்தெடுத்து பைலைப் பதிந்திடலாம்.

ஆனால்,இது எச்.டி. எம்.எல். பைலாகத் தான் பதியப் படும். அவ்வாறு பதிவது நமக்கு உகந்ததாக இருக்காது. ஏனென்றால், தேவையற்ற பல விடயங்களுடன் , பைல்களுடன் அந்த பைல் பதிவாகும்.ஒரு டொகு மெண்டா கப் பதிவாகாது. ஆனால் இதனையே ஒரு பி.டி.எப்.பைலாக பதிந்தால், ஒரே பைலாக அனைத்து தகவல் கள் மற்றும் ஒப்ஜெக்ட்களுடன் கூடிய பைல் ஒன்று கிடைக்கும் .இதனை மற்றவர்கள் பெற்றுப் பயன்படுத்துவதும் எளிதாகும்.

சரி, இணையத் தளப் பக்கத்தினை எப்படி பி.டி.எப். பைலாக மாற்றுவது? இதற்கு உதவிடும் வகையில் கிடைப்பது Joliprint bookmarklet என்னும் புரோகிராமாகும். புக் மார்க்குகள் பயன்படுத்தும் அனைத்து பிரவுசர்களிலும் இது இயங்கும்.புக்மார்க்லெட் என்பதுவும் ஒரு வகை புக்மார்க் தான். புக்மார்க்குகள் அனைத்தும் ஏதேனும் ஒரு இணையத்தளத்தின் சுருக்கு வழிகளாக அமையும்.ஆனால் இந்த புக்மார்க்லெட் ஜாவா ஸ்கிரிப்ட் குறியீடுகள் அமைந்ததாக இருக்கும்.

இவை இயக்கப்பட்டவுடன், குறிப்பிட்ட இணையத்தளத்துடன் இணைந்து இயங்கும்.தானாகவே இணையத் தளத்தினை ஒரு பி.டி.எப் பைலாக மாற்றும். இந்த புக்மார்க்லெட்டில் கிளிக் செய்துவிட்டு, அது மாற்றப்பட்டு கிடைப்பதனை நாம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கலாம். இதன் இயக்கத்தின் இன்னொரு சிறப்பு என்னவெனில் , இணையப் பக்கத்தில் உள்ள தேவையற்ற மெனு,விளம்பரங்களை இது தானாகவே நீக்கிவிடுகிறது.போர்மட்டிங், லிங்க்ஸ், கட்டுரைக்கான படங்கள் ஆகியவற்றை மட்டும் தக்கவைத்துக் கொள்கிறது.கட்டுரையினை இரண்டு பத்திகளாக அமைத்துத் தருகிறது.

இந்தப் புரோகிராம் இயங்கும்போது, கணனியுடன் இணைந்த இன்டர்நெட் இணைப்பு இயங்கிக் கொண்டிருக்க வேண்டும்.

ஜாலி பிரிண்ட் புரோகிராமினை, நம் கணனிகளில் இன்ஸ்டோல் செய்திடத் தேவையில்லை. ஜாலிபிரிண்ட் இணையத் தளத்தில் இதன் ஐகனைக் கிளிக் செய்து, இழுத்து புக்மார்க்காக அமைத்துவிட்டால் போதும் பின் தேவைப்படுகையில், இந்த புக்மார்க்கில் கிளிக்செய்து, இணையத்தளங்களை பி.டி.எப் பைலாக மாற்றலாம்.




இந்த ஜோலிபிரிண்ட் புரோகிராமினைப் பெற நீங்கள் செல்ல வேண்டிய இணையத் தள முகவரி http://joli print. com/bookmar kinstr uctions/

# அடம்பிடிக்கும் பைல்களை அழிக்க!

சிலவேளைகளில்,பைல்களை அழிக்க முற்படுகையில், அது அழிய மறுக்கும். கீழ்க்காணும் செய்திகளில் ஒன்று நமக்குக் காட்டப்படும்.

Cannot delete file:Access is denied
There has been a sharing violation.
The source or destination file may be in use.
The file is in use by another program or user.
Make sure the disk is not full or write -protected and that the file is not currently in use.



பைலை அணுக இயலவில்லை. இந்த பைலுக்கு உங்களுக்கு வழி இல்லை. பைல் பயன்பாட்டில் உள்ளது. இன்னொருவர் இதே பைலைப் பயன்படுத்திக் கொண்டுள்ளார். இன்னொரு புரோகிராம் பயன்படுத்திக் கொண்டுள்ளது. பைல் அழிக்கப்படாமல் இருக்க, டிஸ்க் பாது காக்கப்பட்டுள்ளது - என்று பல வகையில் செய்திகள் கிடைக்கலாம். அழிக்க மறுக்கையில் மட்டுமன்றி, பைலுக்கு வேறு பெயர் இடமுயற்சிக்கையில், ஓரிடத்திலிருந்து நகர்த்த முயற்சிக்கையிலும் இதுபோன்ற செய்திகள் கிடைக்கும். இவற்றை எல்லாம் மீறி நாம் பைலை அழிக்க எண்ணினாலும், இந்த செய்தி எதனால் வருகிறது என்று கண்டறிவதில் நேரம் செலவழியும். இதற்குத் தீர்வாக நமக்குக் கிடைத்திருப்பது அன்லொக்கர் (Unlocker) என்னும் புரோகிரமாம். இதனை http://ccollomb.free. fr/ unlocker/#download என்ற முகவரியில் உள்ள தளத்தில் பெறலாம்.

இந்த பைலை இலவசமாக இணையத்தளத்திலிருந்து இறக்கி, இன்ஸ்ரோல் செய்துவிட்டால், விண்டோஸ் இதுபோன்ற செய்திதருகையில், அன்லொக்கர்புரோகிராமை, அந்தபைலின் பெயர் அல்லது போல்டரின் பெயரில் ரைட் கிளிக் செய்து இயக்கத்திற்குக் கொண்டு வரலாம்.அப்போது பைலை அல்லது போல்டரை அழிக்க விடாமல் தடுக்கும் லொக்கர்கள் பட்டியலிடப்படும். மெனுவில் Unlock என்பதில் கிளிக் செய்தால், அனைத்து லொக்கர்களும் விலக்கிக் கொள்ளப்பட்டு, பைல் அழிக்கப்படும். அல்லது நீங்கள் விரும்பும்வேலையை மேற்கொள்ள வழி கிடைக்கும்.

அன்லொக்கர் போல இணையத்தில், அடம் பிடிக்கும் பைல்களை அழிக்கப் பல புரோகிராம்கள் கிடைக்கின்றன. ஆனால் மற்றவற்றில் கிடைக்காத பல வசதிகளை அன்லொக்கர் கொண்டுள்ளது.

அவற்றைப் பயன்படுத்திப் பார்க்கையில் இதனை உணரலாம். அன் லொக்கர் தரும் அனைத்து வசதிகளையும் தரும் புரோகிராம்கள் எதுவும் இந்த புரோகிராம்களில் இல்லை.ஏதேனும் ஒன்றிரண்டு வசதி குறைவாகவே உள்ளது. மற்ற புரோகிராம்கள் சிலவற்றை இங்கு பார்க்கலாம்.

◆ ப்ரோசஸ் எக்ஸ்புளோரர் (Process Explorer): இதனைப் பெற http://www.sysinternals.com/ ntw2k/freeware/p rocexp.shtml என்ற முகவரியில் உள்ள தளம் செல்லவும்.

◆ பைல் அசாசின் (File Assassin) : தளம் http:// www.malwarebytes.org/fileassassin.php

◆ ஹூலொக் மி (Who Lock Me) :தளம் http:// www.drhoiby.com/WhoLockMe/ind ex.php

# உதவி! உதவி! கணனி வைரஸ்



தலையங்கத்தில் உள்ளதுபோல் அவசர அழைப்புகள் இப்போது நிறைய வரத் தொடங்கிவிட்டன. சிலருக்கு கணனியில் வைரஸ் வந்திருக்கும். சிலரோ கணனி வேறு காரணமாகச் சற்று வித்தியாசமாக செயல்பட ஆரம்பித்தால், உடனே வைரஸ்தான் வந்துவிட்டது என்று பதைபதைப்புடன் உதவிக் குரல் எழுப்புகின்றனர். இந்த சூழ்நிலையைச் சற்றுத் தெளிவுடன் நோக்கி,தீர்வு குறித்து இங்கு காணலாம்.

### எச்சரிக்கை சமிக்ஞைகள்

மெதுவாக இயங்குவது, எந்த கீபோர்ட் அல்லது மவுஸ் இயக்கத்திற்கும் சரியான செயல்பாடு காட்டாதது,திடீரென இயக்கம் முடங்குவது, ட்ரைவ்களைச் சரியாகக் காட்டாதது, அப்ளிகேஷன் சொப்ட்வெயர் தொகுப்புகள் முறையாக இயங்காதது ஆகியவை வைரஸ் பாதித்த கணனிகளின் சில செயற்பாடுகளாகும். இவற்றுடன் வழக்கத்திற்கு மாறான பிழைச் செய்திகள்,மாற்றி அமைக்கப்பட்ட மெனுக்கள் மற்றும் டயலொக் பொக்ஸ்கள் எனக் காட்டப்படும்.

ஸ்பைவெயர் மற்றும் மால்வெயர் ஆகியவறை கணனியில் இருந்தால், மெதுவாக இயங்கும் தன்மையுடன், நம் பிரவுசரில் புதிய டூல்பார்கள், லிங்குகள், ஹோம்பேஜ் மாற்றம், மவுஸ் பொண்ட்டர் மாற்றம் ,சேர்ச் இஞ்சின் மாற்றம் ஆகியவை ஏற்படும்.நாம் டைப் செய்து பார்க்க விரும்பும் தளத்திற்குப் பதிலாக வேறு ஒரு தளத்திற்கு நம்மை இட்டுச் செல்வது, பொப் அப் விளம்பரங்கள் எனப் பலவகைகளில் அவை ஆட்டம் காட்டும். இதில் என்ன வேடிக்கை என்றால், நம் கணனி இன்டர் நெட் இணைப்பு இல்லாதபோதும் இந்த மாற்றங்களை நம் கணனியில் சந்திக்கலாம்.

### சிஸ்டம் பிரச்சினைகள்

கணனி மெதுவாக இயங்கினாலே, அதில் வைரஸ் அல்லது ஸ்பைவெயர்உள்ளது எனக் கலவரப்பட வேண்டாம். நம் கணனி சிஸ்டத்தில் வேறு சில ஹார்ட்வெயர் அல்லது சொப்ட் வெயர் பிரச்சினைகள் இருக்கலாம். கணனியின் டிஸ்கினை போர்மட் செய்திட வேண்டியதிருக்கும். மெமரி கூடுதலாகத் தேவைப்படும்.அல்லது வேறு ஏதேனும் பிரச்சினை இருக்கலாம். (தீர்வுகள் அடுத்தவாரம் வரும்)

# உங்களுக்குத் தெரியுமா?

■ மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் வேர்ட் தொகுப்பில் சேவ் என்ற செயற்பாட்டிற்கான ஐகன் இன்னும் பிளப்பி டிஸ்க்காகவே உள்ளது. அதிலும் அதன் ஷட்டர் பின்புறமாக இழுக்கப்பட்ட நிலையில் உள்ளது.

■ இன்று இணையத்திற்கான ஏகப்பட்ட சேர்ச் இன்சின்கள் உள்ளன. முதல் முதலில் உருவாக்கப்பட்ட சேர்ச் இஞ்சின் குறித்துப் பார்ப்போமா! Archie என்ற பெயரில் முதல் சேர்ச் இஞ்சின் உருவானது.இதனை Alan Emtage என்பவர் தயாரித்தார்.இவர் McGill என்ற பல்கலைக் கழகத்தில் அப்போது மாணவராக இருந்தார். இது 1990 இல் உருவானது.

■ உலகின் சிறிய ஹார்ட் டிஸ்க்கை உருவாக்கிய பெருமை தோஷிபா நிறுவனத்தைச் சேரும். 0.85 அங்குல அளவில் இந்த ஹார்ட் டிஸ்க் தயாரிக்கப்பட்டது .ஒரு அங்குலத்திற்கும் குறைவான அளவிலான டிஸ்க்கில் பல கிகாபைட் அளவிலான தகவல்களைக் கொண்டிருந்ததும் இந்த டிஸ்க்கே.

■ இன்டர் நெட்டில் உலா வருபவர்கள் விக்கிபீடியாவைப் (Wikipedia) பயன்படுத்தாமல் இருக்கமாட்டீர்கள். அனைத்திற்கும் அதன் ஆதி அந்தம் முதல் தகவல்களைத் தரும் இணைய களஞ்சியமாகும். நீங்களும் உங்களிடம் உள்ள தகவல்களை இதில் இடலாம் என்பது இதன் சிறப்பு. இந்த Wikipedia என்ற சொல் ஏன் இதற்கு வைக்கப்பட்டது என்று எப்போதாவது யோசித்திருக்கிறீர்களா! ஹவாய் மொழியில் 'Wiki'என்றால் வரைவில் என்று பொருள். அதோடு என்சைக்ளோ பீடியாவின் பின் பகுதி சேர்க்கப்பட்டு இந்த சொல்"உருவாக்கப்பட்டதாம்.

■ பல வீடுகளில் மைக்ரோ ஓவன் அடுப்பு உள்ளது. இது பயன்படுத்தும் மின்சாரம் 600 வாட் முதல்1100 வாட் வரை ஆகும்.

சரி, உங்கள் மொபைல் போன் எவ்வளவு மின்சாரம் பயன்படுத்துகிறது என்று எண்ணிப் பார்த்திருக்கிறீர்களா? ஜஸ்ட் 0.6 வாட்ஸ் தான்.

■ இமெயிலில் @ என்ற எழுத்து பயன்படுத்தப்படுகிறது.இது எதனைக் குறிக்கிறது. இது at என்ற ஆங்கில சொல்லின் சுருக்கம் ஆகும். "இந்த இடத்தில்" என்பதனை இது பொருளாகக் கொண்டுள்ளது. இந்த முகவரியில் உள்ள சர்வரில் இவருக்கு இன் பொக்ஸ் உள்ளது என்பதே ஒரு இமெயில் முகவரியாகும்.

■ சிடிக்கள் என அழைக்கப்படும் கொம்பாக்ட் டிஸ்க்குகள் அதில் பதிந்துள்ள தகவல்களை நடு மையத்திலிருந்து படிக்கத் தொடங்கி விளிம்பில் முடிக்கின்றன. இது மியூசிக் ரெகோடர்களுக்கு எதிரான வழியாகும். மியூசிக் ரெகோர்டர்கள் விளம்பிலிருந்து தொடங்கி நடுப்பாகம் செல்கின்றன.

■ எக்ஸெல் தொகுப்பில் தகவல்களை பேஸ்ட் செய்திட கொண்ட்ரோல்+ வி அல்லது பேஸ்ட் பட்டனைப் பயன்படுத்தவேண்டுமென்பதில்லை. ஒரு செல்லில் உள்ள தகவல்களை கொண்ட்ரோல் +சி கொடுத்து கொப்பி செய்திடுங்கள். பின் அந்த செல்லில் அவற்றை பேஸ்ட் செய்திட வேண்டுமோ அந்த செல்லில் கோர்சரைக் கொண்டு செல்லுங்கள். பின் ஜஸ்ட் என்டர் தட்டுங்கள். ஆஹா! பேஸ்ட் ஆகிவிட்டதா உங்கள் தகவல்கள்.

என்னை துதிபாடுகிறவர்களை விட என்னைக் கடுமையாக விமர்சிப்பவர்களால்தான் நான் அதிகம் நன்மை பெற்றுள்ளேன்.

*– காந்தியடிகள்*

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## யாழ்ப்பாண நோய் தொற்றாமல் இருக்க வேண்டும்

வடக்கு மாகாண சபையின் அலுவலகங்களை யாழ்ப்பாணத்தில் இயக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2011 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் வடக்கு மாகாணத்தின் அலுவலகங்களை யாழ்ப்பாணத்தில் இயக்குவதற்கான உத்தரவுகளும் கிடைக்கப் பெற்றுவிட்டன.

திருகோணமலையில் இயங்கிய வடக்கு மாகாண செயலகங்கள், அமைச்சு அலுவலகங்கள் மற்றும் மாகாணத் திணைக்கள அலுவலகங்களே யாழ்ப்பாணத்தில் இயங்கவுள்ளன.

உண்மையில் இவை யாழ்ப்பாணத்தில் இயங்குவதால் யாழ் குடாநாட்டு மக்களுக்கு நன்மை என்ற நினைப்பு இருக்கலாம்.

ஆனால் தனிப்பட்ட முறையில் கருத்துக் கூறுவதாக இருந்தால், யாழ்ப்பாணத்திற்கு இவை இப்போது வேண்டாம் என்றே சொல்லமுடியும்.

இதை சொல்லும்போது பலருக்கு அதிர்ச்சி ஏற்படலாம். அதற்காக நாம் வருந்துகின்றோம். ஆனால், யாழ்ப்பாணத்து நோய் ஒன்று உண்டு. அந்த நோய் வடக்கு மாகாண சபையின் அலுவலகத்திற்கும் தொற்றிவிட்டால் எதுவுமே செய்ய முடியாமல் போகும்.

இதை நாம் கூறும்போது யாழ்ப்பாணத்து நோய் என்ன என்று நீங்கள் கேட்பது தெரிகிறது.

ஆம், யாழ்ப்பாணத்தார் யாழ்ப்பாணத்தில் பணியாற்றுவதற்கும், வெளி மாவட்டங்களில் பணியாற்றுவதற்குமிடையே நிறைந்த வேறுபாடு உண்டு.

யாழ்ப்பாணத்தவர் வெளிமாவட்டங்களில் பணியாற்றும் போது அவர்களின் பணியில் உற்சாகமிருப்பதுடன், சேவையை பெற்றுக்கொள்வதும் இலகுவானது.

அதேசமயம் இவர்கள் தங்கள் பணிக்கதிரையில் அமர்ந்தும் இருப்பர்.

ஆனால், யாழ்ப்பாணத்தார் யாழ்ப்பாணத்தில் வேலை செய்தால், கதிரையில் இருப்பது மிகவும் அரிது. இதைவிட யாழ்ப்பாண மின்சாரம் போல அவர்களிடம் சிரிப்பும் அடிக்கடி 'கட்' ஆகி முகம் இருட்டாகவே இருக்கும்.

அலுவல்களைச் செய்து முடிப்பதென்பது கல்லில் நார் உரிப்பதான கடினம். இதுதான் அந்த நோய்.

இறைவா! திருகோணமலைக்கு பயணம் செய்யும் கடினத்தைத் தவிர அங்கு சென்றுவிட்டால் அலுவலை முடித்த திருப்தியோடு திரும்பலாம். ஆனால் அந்த அலுவலகங்கள் யாழ்ப்பாணத்திற்கு வந்தால் நிலைமை என்னவாகும்?

எதுவாயினும் ஒன்று மட்டும் உண்மை. தொண்டைமானாறு புகையிலை நாற்றை, வேலணையில் நட்டால்தான் புகையிலை அந்தமாதிரி இருக்கும்.

தொண்டைமானாற்றிலேயே செய்கைபண்ணினால் இலை முறியும்; ஒடியும்; சிலவேளை கருகருக்கவும் செய்யும்.

இந்தநிலைதான் யாழ்ப்பாணத்தார் யாழ்ப்பாணத்தில் பணியாற்றினாலும்.

ஏதோ யோசித்துச் செய்யுங்கள்.

மின்சாரசபை அதிரடி

## சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற 7 பேர் வசமாக மாட்டிக் கொண்டனர்

(யாழ்ப்பாணம்)

அரியாலைப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் மின்சாரம் பெற்ற 7 பேரிடம் இருந்து ஒரு இலட்சத்து 61 ஆயிரம் ரூபாய் அறவீடு செய்யப்பட்டது.

கொழும்பிலிருந்து வந்த இலங்கை மின்சாரசபையின் விசேட சோதனைக் குழுவும் யாழ்ப்பாணப் பொலிஸாரும் இணைந்து அரியாலைப்பகுதியில் மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையில் (சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற) 7 பேர் வசமாக மாட்டிக்கொண்டனர்.

நேற்று இடம் பெற்ற இச் சோதனை நடவடிக்கையின் போது கைதுசெய்யப்பட்ட 7பேரும் யாழ்.நீதவான் நீதிமன்ற நீதிபதி எ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர். இவ்வழக்கை விசாரித்த நீதவான் ஒவ்வொருவரிடமிருந்தும் தலா 15 ஆயிரம் ரூபாய் அபராதமும், நட்டஈடாக மின்சார சபைக்கு 8 ஆயிரம்ரூபாயுமாக 23 ஆயிரம்ரூபாய் செலுத்துமாறு உத்தரவிட்டார். (ச-6)

## தனியார்துறை வேலைவாய்ப்புக்காக தொழிற்சந்தை மூலம் நேர்முகத்தேர்வு

(யாழ்ப்பாணம்)

தொழில் உறவுகள் உற்பத்தித்திறன் மேம்பாட்டு அமைச்சின் மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களத்தினால் நவம்பர் மாதம் 13 ஆம் திகதி தொழிற் சந்தை மூலம் வேலைவாய்ப்பினை ஒழுங்கு படுத்தி வழங்கும்நிகழ்வுயாழ்ப்பாணத்தில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வெளிமாவட்டத்திலிருந்து வருகை தரும் தனியார்துறை தொழில் நிறுவனங்களும் யாழ்.மாவட்ட தனியார் துறைத் தொழில் நிறுவனங்களும் கலந்து கொண்டு தமது பணியாளர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அன்றைய தினமே நேர்முகத் தேர்வினை நடத்தி இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்பினை வழங்க முன்வந்துள்ளன.

ஆகவே தமது பணியாளர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு விரும்புகின்ற உடுவில் பிரதேச செயலகப் பிரிவிற்கு உட்பட்ட தனியார்துறை தொழில் நிறுவனங்கள் பிரதேச செயலகத்தில் எதிர்வரும் 8 ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறும் இவை தொடர்பான மேலதிக விபரங்களை உடுவில் பிரதேச செயலக மனிதவள அபிவிருத்தி உதவியாளருடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளுமாறு உடுவில் பிரதேச செயலர் திருமதி மஞ்சுளா தேவி சதீஸன் அறிவித்துள்ளார். (ச)

## நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை சமர்ப்பிப்பதற்கு காலதாமதமாகும்

## அதன் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழுவின் அறிக்கை ஏற்கனவே அறிவிக்கப்பட்ட காலத் திற்குள் சமர்ப்பிக்க முடியாது போகும் என ஆணைக்குழுவின் தலைவர் முன்னாள் சட்டமா அதிபர் சீ.ஆர்.டி. சில்வா தெரிவித்துள்ளார்.

ஆணைக்குழுவின் முழுமை யான அறிக்கையை இந்த மாதம் 19 ஆம் திகதி கையளிப்பதாக முன்னர் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் முழுமையான அறிக்கை வழங்க காலதாம தமாகும் எனவும் அவர் கூறியுள்ளார்.

எதிர்வரும் 11 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் ஆணைக்குழு சாட்சியங்களை பதிவு செய்யவுள்ளது. 4 நாட்கள் யாழ்ப்பாணத்தில் சாட்சி யங் கள் பதிவு செய்யப்படவுள்ளன. யாழ்ப் பாணத்தில் உள்ளவர்கள் அங்கு வைத்தே சாட்சியமளிக்க வேண்டுமென கேட்டிருந்ததாகவும் சீ. ஆ.டி.சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்று வரும் சாட்சியப் பதிவில் நேற்று கொழும்பு பேராயர் வணக்கத்திற் குரிய கர்தினால் மெல்கம்ரஞ்சித்சாட்சியமளித்துள்ளார். ஸ்ரீ

## சங்கீத பாட செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வி வலயத்தினால் நடத்தப்படும் க.பொ.த சா/த மாணவர்களுக்கான சங்கீதபாடக் கருத்தரங்கு எதிர்வரும் 8,10 மற்றும் 11 ஆம் திகதிகளில் நடைபெறும் என வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார்.

எதிர்வரும் 8 ஆம் திகதி திங்கட்கிழமை அச்சுவேலி மத்தியகல்லூரி, கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி ஆகிய பாடசாலைகளிலும்,

10 ஆம் திகதி புதன்கிழமை யாழ். இந்துமகளிர் கல்லூரி, கொக்குவில் இந்துக்கல்லூரி, 11 ஆம்திகதி சென்சாள்ஸ் மகாவித்தியாலயம், வைத்தீஸ்வரக்கல்லூரி ஆகிய பாடசாலைகளிலும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## அழகியற் போட்டிகள் மத்திய கல்லூரியில்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலயக்கல்வி அலுவலகத்தினால் நடத்தப்படும் அழகியற் போட்டிகள் நாளை மறுதினம் சனிக்கிழமை 6 ஆம் திகதியும், மறுநாள் ஞாயிற்றுக் கிழமையும் யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறும் என வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துளார். (ச)

## தீபாவளியை முன்னிட்டு விசேட நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

வழக்கம்பரை சுழிபுரத்தில் உள்ள சிவபூமி முதியோர் இல்லத்தில் தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு தலைவர் ஆறு.திருமுருகன் தலைமையில் விசேட நிகழ்வுகள் இடம்பெறவுள்ளது.

இதில் மகாஜனக்கல்லூரி மாணவர்களின் நடனம், பட்டிமன்றம், வசந்தன் கூத்து என்பனவும் இடம்பெறவுள்ளது. ஸ்ரீ

## சிற்றூர்தி சேவைகள் இரவு 8 மணிவரை நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு சிற்றூர்தி சேவைகள் இன்றிலிருந்து யாழ்.பஸ்நிலையத்திலிருந்து இரவு 8.00 மணிவரையும் இடம்பெறுமென யாழ்மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர் அறிவித்துள்ளார்.

பயணிகளின் நலன் கருதி தொடர்ந்தும் இதனை அமுல்படுத்த எண்ணியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். (ஸ்ரீ-6)

## குற்றங்காணல் தவிர் - பகவான் பாபா

இரண்டு முகமதிய மௌலவிகள் நகரத்திலுள்ள பள்ளியொன்றுக்கு தொழுகைக்காக நீண்ட தூரம் நடந்து வந்து கொண்டிருந்தனர். வரும் பொழுது தங்கள் சக மௌலவி ஒருவரைப் பற்றி, பெண்பித்தன், பண ஆசைக்காரன், பள்ளியன் நிதியைக் கையாடல் செய் கிறான் என்றெல்லாம் அவதூறாகப் பேசிக்கொண்டு வந்தனர்.

அப்போது பெருமான் அல்லா, அவர்கள் முன்தோன்றி, அன்பர்களே, நீண்ட தூரம் இருந்து வருகிறீர்கள். பசியும் வாட்டுவது போல் தெரிகிறது. எனவே சற்றுத் தொலைவில் ஒரு கழுதை இறந்து கிடக்கிறது. அதன் இறைச்சி யைப் புசித்து விட்டு பசியாறிச் செல்லுங் கள் என்றார்.

அவர்கள் இருவரும் கோபத்தின் உச்சிக்கே போய் விட்டார்கள். "என்ன சொல்கிறீர்? இறந்த கழுதை இறைச்சியை யாரும் உணவாக கொள்வார்களா?" எனச் சீறினார்கள். அதற்கு பெருமானார், "சரி அது குற்றம் தான், தவறுதான் அதற்காக உங்களிடம் மன்னிப்புக் கேட்கிறேன். ஆனால் நீங்கள் இருவரும் இப்போது கதைத்துக் கொண்டு வந்த கதையும் காலங்கடந்த செத்த கதை தானே? அதைத்தானே உங்கள் உள்ளத்துக்கு உணவாக பரி மாறி வந்தீர்கள். செத்த கழுதை இறைச் சியை ஒருவன் எப்படி உண வாக்க மறுக்கிறானோ. அதே போல் தான் காலங் கடந்த அடுத்தவர் குறையினை நாம் கூறித்தரிதலாகும் என்று கூறி மறை ந்து விட்டார்.

மனிதனில் தோன்றும் ஆசை, கோபம், பொறாமை மூன்றும் பாவம் எனும் அகல பாதாளச் சிறையில் வீழ்த்துபவன் ஆசை பாவத்தின் விளை நிலம். கோபம் அன்பினைச் சுட்டெரிக்கும் பெரு நெருப்பு. பொறாமை தன்னையே பாழ் கிணற்றில் தள்ளி விடும்.இவைகளோடு மற்றவரை குறை கூறல், பழிசுமத்தல் எல்லாம் வல்ல சாயி பகவான் அருளுகிறார்.



பிறர் செயல் உனக்கு பிழையெனப்பட்டாலும் அதை நீ பெரிதுபடுத்தாதே. அதனை மறந்து மன்னித்து விடு. உன் உள்ளம் அமைதி நிறைந்த நீர் தடாகம் போல் தெளிவாகக் காணப்படும் என்கிறார்.

ஜெய் சாய்ராம் யாதவன்

# ஈழத்தமிழர்களைப் பாதுகாக்க புலிகள் மீதான தடையை நீக்க வேண்டும்

## வைகோ வலியுறுத்து



ஈழத்தமிழர்களைப் பாதுகாக்கவேண்டுமானால் புலிகள் மீதான தடையை இந்திய அரசு நீக்க வேண்டும் என்று மக்கள் திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்தார்.

விடுதலைப்புலிகள் அமைப்புக்கு தடையை நீடிப்பது குறித்து விசாரிக்க நீதிபதி விக்ரம்ஜித் சென் தலைமையில் ஒரு நீதிபதி நடுவர் மன்றம் அமைக்கப்பட்டது. விடுதலைப்புலிகள் மீதான தடையை நீடிப்பது குறித்து பல்வேறு தரப்பினரின் கருத்துக்களையும் நீதிபதி விக்ரம்ஜித் சென் விசாரித்து வந்தார்.

தமிழ் நாட்டில் சென்னை, நீலகிரி உள்ளிட்ட இடங்களிலும் விசாரணை நடைபெற்றது. விடுதலைப்புலிகள் அமைப்புக்கு தடை நீடிப்பதை எதிர்த்து ம.தி.மு. க பொதுச் செயலாளர் வைகோ, பழ.நெடுமாறன் உள்ளிட்டோர் வாதிட்டனர். இந்தச் சூழ்நிலையில், டில்லியில் விசாரணை நடைபெற்றது.

விசாரணையின்போது, நேரில் ஆஜரான வைகோ தனது விவாதத்தை முன் வைத்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். தமிழ் ஈழத்தை அடைவதற்காக விடுதலைப் புலிகள் போராடுவது தமிழ் நாட்டையும் அதில் சேர்த்து கொள்வதற்காகவே என்றும் இவர்களது போராட்டத்தால் இந்தியாவின் ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டுக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாகவும் அரசு வழக்கறிஞர் குறிப்பிட்டுள்ளார் . அதேபோல் புலிகளின் தமிழீழ வரைபடத்தில் தமிழ்நாடும் சேர்க்கப்பட்டுள்ளது என்றும் அரசு வழக்கறிஞர் தெரிவித்தார். இதில் ஒரு சதவீதம் கூட உண்மையில்லை. இதற்கான ஆதாரங்களை அவரால் காட்ட முடியாது.

தமிழ் ஈழம் என்பது இலங்கைத் தீவின் வடக்கு -கிழக்குப் பகுதிகள்தான் என்பதை விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் தனது மாவீரர் தின உரையில் திட்டவட்டமாகக் கூறியுள்ளார்.

நோர்வே அரசு இலங்கையில் அமைதியை ஏற்படுத்த பல ஆண்டுகளாக பேச்சுவார்த்தையில் ஈடுபட்டது. தமிழ் ஈழத்தில் இந்தியப் பகுதியையும் சேர்க்கும் திட்டம் புலிகளுக்கு இருந்திருக்குமானால் அது நோர்வே அரசுக்குத் தெரியாமல் இருக்க முடியாது. அப்படி இருந்திருந்தால் நோர்வே இந்தப் பிரச்சினையில் தலையிட்டிருக்காது.

தமிழ் ஈழத்தைக் காரணம் காட்டியே விடுதலைப் புலிகளுக்கு இந்திய அரசு தடை விதித்துள்ளது. இந்திய ஒருமைப்பாட்டுக்கு ஆபத்து என்று மொத்த வழக்கையும் அரசு எழுப்பியுள்ளது. அதில் உண்மையில்லை என்பதால் விடுதலைப் புலிகள் மீதான தடையை நீடிக்க எந்த நியாயமும் இல்லை. விடுதலைப் புலிகள் போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்டதாக வழக்குகள் இருப்பதாக அரசு வழக்கறிஞர் தெரிவித்துள்ளார். விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்று கூறி ஒருவர் மீது கூட தமிழ் நாட்டில் வழக்கு எதுவும் தொடரப்படவில்லை என்று காவல் துறை அதிகாரியே நீதிமன்ற குறுக்கு விசாரணையில் ஒப்புக் கொண்டுள்ளார்.

விடுதலைப் புலிகளால் இந்தியத் தலைவர்களுக்கு ஆபத்து ஏற்படும் என்றும் ஒரு வாதத்தை அரசு முன் வைக்கிறது. இதை சட்ட விரோதச் செயல் என்ற விளக்கத்துக்குள் கொண்டுவர முடியாது.

புலிகள் இயக்கத்தைத் தடை செய்துள்ளதன் மூலம் ஈழத் தமிழர்கள் தமிழகத்துக்கு வந்தால் அவர்களை புலிகள் என்று கூறி அரசு சிறையில் அடைக்கிறது. ஈழத் தமிழர்கள் இன்று சர்வதேச அகதிகளாகிவிட்டனர். பாதுகாக்க புலிகள் இயக்கத்தை தடை செய்து விட்டன.

ஈழத் தமிழர்களைப் பாதுகாக்க புலிகள் மீதான தடையை அரசு நீக்கவேண்டும் என்று வைகோ வாதாடினார். (ஸ்ரீ)

# அமெரிக்க மாகாண ஆளுநராக இந்திய வம்சாவளி பெண் தெரிவு

(புதுடில்லி)

அமெரிக்காவில் உள்ள பல்வேறு மாநிலங்களில் ஆளுநர்கள் மற்றும் நாடாளுமன்ற கீழ்சபை மற்றும் மேல் சபை பிரதிநிதிகளை தேர்ந்தெடுப்பதற்கான இடைத் தேர்தல் அண்மையில் நடந்தது.

வாக்குகள் எண்ணப்பட்டு வெற்றிபெற்றோர் விபரங்கள் வெளியிடப்பட்டு வருகின்றன.

இதில் தெற்கு கரோலினா மாநில ஆளுநர் பதவிக்கு குடியரசுக் கட்சி சார்பாக போட்டியிட்ட இந்திய வம்சாவளியைச்சேர்ந்த நிக்கிஹாலே என்ற பெண் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளார்.

மொத்தம் பதிவான 75 சதவீத வாக்குகளில் 52 சதவீத வாக்குகளைப் பெற்ற இவர் வெற்றிபெற்றுள்ளார்.

இவரை எதிர்த்துப் போட்டியிட்ட ஒபாமாவின் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் வின்சென்ட் ஷீஹன் 46 சதவீத வாக்குகள் பெற்று தோல்வியைத் தழுவினார்.

நிக்கி ஹாலே இரண்டாம் தலைமுறை அமெரிக்க இந்தியர் ஆவார். இவரது பெற்றோர் பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்தவர்கள்.

தெற்கு கரோலினா மாகாணத்தின் முதல் பெண் ஆளுநர் என்ற பெருமையும் நிக்கி ஹாலேக்கு கிடைத்துள்ளது. (ஸ்ரீ)

## பாரதச் செய்திகள்

# ஒபாமாவை சந்தித்துப்பேச சுஷ்மா சுவராஜ் திட்டம்

அமெரிக்க அதிபர் ஒபாமா இந்தியாவில் நாளை மறுதினம் முதல் 4 நாட்கள் சுற்றுப் பயணம் செய்து பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்கிறார்.

டில்லியில் 2 நாட்களும் மும்பையில் 2 நாட்களும் தங்குகிறார். அப்போது பல்வேறு அரசியல் தலைவர்களை ஒபாமா சந்திக்கிறார்.

பாரதீய ஜனதா சார்பில் பாராளுமன்ற எதிர்க்கட்சி தலைவர் சுஷ்மா சுவராஜ் ஒபாமாவை சந்தித்துப் பேசத் திட்டமிட்டுள்ளார்.

அப்போது தீவிரவாதிகள் பிரச்சினை பற்றி சுஷ்மா சுவராஜ் பேச்சு நடத்துவார்.

பாகிஸ்தான் தீவிரவாதிகள் இந்தியாவுக்கு எதிராக நாசவேலையில் ஈடுபட்டு வருகிறார்கள். ஆனால் பாகிஸ்தானுக்கு அமெரிக்க பல்வேறு உதவிகளை செய்து வருகிறது. இதில் அமெரிக்கா இரட்டை நிலையைக் கடைப்பிடித்து வருகிறது. இதுகுறித்து ஒபாமாவிடம் பாரதீய ஜனதா சார்பில் எடுத்துக் கூறப்படும்.

மும்பைத் தாக்குதலில் பாகிஸ்தான் தீவிரவாதிகளின் கைவரிசை உறுதிப்படுத்தப்பட்டு உள்ளது.

இந்நிலையில் பாகிஸ்தானுக்கு அமெரிக்கா தொடர்ந்து உதவிகள் செய்து வருவது குறித்துப் பேசப்படும்.

பாரதீய ஜனதா தலைவர்கள் அத்வானி, நிதின் கட்காரி, அருண்ஜெட்லி ஆகியோர் டில்லியில் விரைவில் கூடி ஒபாமாவின் இந்தியா பயணம் குறித்து ஆலோசனை நடத்துகிறார்கள்.

இதில் பாரதீய ஜனதா சார்பில் ஒபாமாவை சுஷ்மா சுவராஜ் சந்தித்துப் பேசுவது குறித்து இறுதி முடிவு எடுத்து அறிவிக்கப்படவுள்ளது. (ஸ்ரீ)

# ஒபாமாவின் இந்திய வருகையால் அமெ.பொருளாதாரத்திற்கு நன்மை

## சீதாராம் ஜெய்ச்சூரி தெரிவிப்பு

அமெரிக்க அதிபர் ஒபாமாவின் இந்திய வருகையால் அந்நாட்டு பொருளாதாரத்திற்குத் தான் நன்மை ஏற்படும் என்று மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியின் பொலிட் பீரோ உறுப்பினர் சீதாராம் ஜெய்ச்சூரி தெரிவித்துள்ளார்.

ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அமெரிக்க நாட்டு வேளாண் பொருட்களை விற்கும் சந்தையாக இந்தியாவை பயன்படுத்த ஒபாமா திட்டமிட்டுள்ளதாக கூறினார். இதனால் அவர்களது பொருளாதார நெருக்கடி சீர் அடைவதுடன் இந்திய வேளாண்துறை அழியும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக அவர் எச்சரித்துள்ளார்.

மும்பை தாக்குதல் பற்றிய முக்கிய தகவல்களை முன்கூட்டியே தெரிந்து வைத்திருந்தும் அதை இந்தியாவிடம் தெரிவிக்கமால் அமெரிக்கா மறைத்து விட்டதாக அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

தீவிரவாதத்தை ஒழிப்பதற்காக அறிவியில் கண்டுபிடிப்புகள் உயர் தொழில் நுட்பங்களை அமெரிக்கா உருவாக்கி வருவதாக கூறியுள்ள அவர் அதனை வளரும் நாடுகளுக்கு அளிக்காமல் சுயநலமாக அந்நாடு செயற்படுவதாகவும் ஒபாமாவின் வருகையால் இந்தியப் பொருளாதாரமே வீழ்ச்சி அடையும் என்றும் கூறியுள்ளார். (ஸ்ரீ)

# இலங்கை அகதிகளிடம் பணமோசடி செய்த மூவர் நாகப்பட்டினத்தில் கைது

(நாகப்பட்டினம்)

வெளிநாடுகளுக்கு அழைத்துச் செல்வதாகக்கூறி, இலங்கை அகதிகளிடம் பணம் பெற்று மோசடி செய்ததாக 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாகபட்டினத்தில், அகதி முகாம்களில் இருந்து வெளியேறி வந்த இலங்கை அகதிகள் 14 பேர் பொலிஸாரால் நேற்று முன்தினம் பிடிக்கப்பட்டனர்.

இந்நிலையில், அவர்களை அகதி முகாம்களில் இருந்து வெளியேற்றி அழைத்து வந்ததாகவும், வெளிநாடுகளில் கொண்டு போய்விட்டு விடுவதாகவும் கூறி, அகதிகளிடம் இருந்து பணம் பெற்று மோசடி செய்த 3 பேரை பொலிஸார் நேற்று கைதுசெய்தனர்.

மீட்கப்பட்ட இலங்கை அகதிகள் அனைவரும் மீண்டும் பத்திரமாக அகதி முகாம்களுக்கே திருப்பி அனுப்பப்பட்டனர். (ஸ்ரீ-2)



காஷ்மீர் ஸ்ரீநகர் அருகே மல்ரு பகுதியில் ஒரு வீட்டில் பதுங்கியிருந்த 3 தீவிரவாதிகளை ராணுவத்தினர் நேற்றுமுன்தினம் சுட்டுக் கொன்றனர். இருதரப்பு துப்பாக்கிச் சண்டையில் தரைமட்டமான வீடுகள் முன்பு பொதுமக்கள் சோகமாக கூடியுள்ளனர்.

# மத்யூஸ், மலிங்க அற்புதம்

# இலங்கை அணி திரில் வெற்றி

## அவுஸ்திரேலிய அணிக்கு அடுத்த அடி



(மெல்பேர்ன்)

மத்யூஸ், மலிங்கவின் துணிச்சலான இணைப்பாட்டத்தின் மூலம் இலங்கை அணி ஒரு விக்கெட் வித்தியாசத்தில் அவுஸ்திரேலிய அணியை வீழ்த்தியது.

இதன் மூலம் 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் இலங்கை அணி 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி ஒரே ஒரு இருபது-20 போட்டி, 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகிறது.

இதில் ஒரு ஒரு இருபது - 20 போட்டியில் வெற்றிபெற்ற இலங்கை அணி கிண்ணத்தைக் கைப்பற்றியது.

இந்நிலையில் முதலாவது ஒருநாள் போட்டி நேற்று மெல்பர்னில் நடைபெற்றது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 6.2 ஓவர்களில் 30 ஓட்டங்களை எடுத்தபோது வோட்ஷன் 10 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார்.

அடுத்துவந்த அணித்தலைவர் மைக்கெல் கிளார்க் நிதானமாக ஆட மறுமுனையில் ஹடின் ஓட்டங்களைக் குவித்தார்.

**வந்தார் பெரேரா**

இந்தஜோடி இரண்டாவது விக்கெட்டுக்காக 55 ஓட்டங்களை எடுத்த போது அணித்தலைவர் மைக்கெல் கிளார்க் 27 ஓட்டங்களுடன் பெரேராவின் பந்து வீச்சில் விக்கெட் காப்பாளர் சங்கக்காரவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து ஹசி களமிறங்க மறுமுனையில் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய பிராட் ஹடின் 55 பந்துகளில் (8 பவுண்டரிகள் உட்பட) 49 ஓட்டங்களை எடுத்து பெரேராவின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய கமரூன் வைற் பூச்சியதுடன் பெரேரா வெளியேற்ற அவுஸ்திரேலிய அணி 19 ஓவர்களில் 88 ஓட்டங்களை எடுத்து 4 விக்கெட்டுக்களையிழந்தது.

தொடர்ந்து வந்த மார்ஷ் பொறுப்பாகத் துடுப்பெடுத்தாட அவுஸ்திரேலிய அணி சரிவிலிருந்து மீண்டது.

இந்தஜோடியின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் அவுஸ்திரேலிய அணி 34 ஓவர்களில் 150 ஓட்டங்களை எட்டியது.

எனினும் ஷோன் மார்ச் 53 பந்துகளில் 31 ஓட்டங்களை எடுத்து ராண்டீவின் பந்து வீச்சில் சங்கக்காரவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து சிமித் களமிறங்க மறுமுனையில் மைக்கெல் ஹசி 71 பந்துகளில் அரைச் சதம் கடந்தார்.

எனினும் பின்வரிசையில் சிமித் 12, ஜோன்சன் 10, ஹேஸ்ரிவ் 16 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க அவுஸ்திரேலிய அணி 50 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களையிழந்து 239 ஓட்டங்களை எடுத்தது.

இதில் மைக்கெல் ஹசி ஆட்டமிழக்காமல் 91 பந்துகளில் (ஒரு பவுண்டரி உட்பட) 71 ஓட்டங்களை எடுத்தார்.

பந்து வீச்சில் பெரேரா 8 ஓவர்கள் பந்து வீசி 46 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களையும் மலிங்க, குலசேகரா, ராண்டீவ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 240 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிக்கு ஆரம்பத்தில் அதிர்ச்சியளித்தது.

ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களான உபுல் தரங்க 3 ஓட்டங்களுடனும் திலகரட்ண் டில்சான் 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேற இலங்கை அணி 5.1 ஓவர்களில் 19 ஓட்டங்களை எடுத்து 2 விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது.

அடுத்து மூன்றாவது விக்கெட்டுக்காக இணைந்த சங்கக்கார – ஜெயவர்தனா ஜோடி பொறுப்பாகத் துடுப்பெடுத்தாடி நம்பிக்கையளித்தனர்.

**டொகேற்ரி அசத்தல்**

இந்த ஜோடி மூன்றாவது விக்கெட்டுக்காக 54 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்த போது மஹேல ஜெயவர்த்தனா 19 ஓட்டங்களுடன் டொகேற்ரியின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

அடுத்துவந்த சாமர சில்வா 4 ஓட்டங்களுடனும் மறுமுனையில் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய அணித்தலைவர் சங்கக்கார 46 பந்துகளில் (6 பவுண்டரிகள் உட்பட) 49 ஓட்டங்களையும் எடுத்து டொகேற்ரியின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

தொடந்து களமிறங்கிய பெரேரா பூச்சியத்துடன் ஜோன்சனின் பந்துவீச்சிலும், ராண்டீவ் 10 ஓட்டங்களுடன் ரன்அவுட் முறையிலும் குலசேகரா பூச்சியத்துடனும் டொகேற்ரியின் பந்துவீச்சிலும் அடுத்தடுத்து ஆட்டமிழந்து வெளியேற இலங்கையணி 25.2 ஓவர்களில் 107 ஓட்டங்களை எடுத்து 8 விக்கெட்டுக்களையிழந்து திணறியது.

**இணைந்தனர்**
**மத்யூஸ்–மலிங்க**

அடுத்து 9ஆவது விக்கெட்டுக்காக மத்யூசிடம் இணைந்த மலிங்க அதிரடியாகத் துடுப்பெடுத்தாடி நம்பிக்கையளித்தார்.

இந்த ஜோடியின் அதிரடியான இணைப்பாட்டத்தின் மூலம் இலங்கையணி சரிவிலிருந்து மீண்டது.

இதில் அஞ்சலோ மத்யூஸ் 61 பந்துகளில் அரைச்சதத்தை கடக்க இலங்கையணி 37.3 ஓவர்களில் 200 ஓட்டங்களை எட்டியது.

இந்த ஜோடியைப் பிரிக்க அவுஸ்திரேலிய அணித்தலைவர் மைக்கல் கிளார்க் களத்தடுப்பில் பல வியூகங்களை வகுத்தும் பலனளிக்கவில்லை.

இதில் லசித் மலிங்க 42 பந்துகளில் அரைச் சதத்தைக் கடக்க இலங்கையணி வெற்றியின் விளிம்புக்கு வந்தது.

எனினும் லசித் மலிங்க 48 பந்துகளில் (6 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் உட்பட) 56 ஓட்டங்களையெடுத்து ரன்அவுட் முறையில் ஆட்டமிழக்க இலங்கையணி43.4 ஓவர்களில் 239 ஓட்டங்களை எடுத்து 9ஆவது விக்கெட்டையிழந்தது.

அடுத்து வெற்றிக்கு ஒரு ஓட்டமே எடுக்க வேண்டிய நிலையில் களமிறங்கிய முத்தையா முரளிதரன் பவுண்டரி விளாச இலங்கையணி 44.2 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களையிழந்து 243 ஓட்டங்களைக் குவித்து ஒரு விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இதில் அஞ்சலோ மத்யூஸ் 84 பந்துகளில் (8 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 77 ஓட்டங்களையும் முரளிதரன் 4 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

பந்துவீச்சில் அறிமுகவீரர் டொகேற்றி 4 விக்கெட்டுக்களையும் ஜோன்சன், சிடில் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப் போட்டியில் இலங்கையணியின் வெற்றிக்குத் திருப்புமுனையமைத்தத மத்யூஸ் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

இவ் வெற்றியின் மூலம் இலங்கையணி தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னணியைப் பெற்றது.

இத் தொடரின் இரண்டாவது போட்டி நாளை சிட்னியில் நடைபெறுகிறது.

### புதிய சாதனை படைப்பு

அவுஸ்திரேலியஅணியுடனானஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி வீரர்களான அஞ்சலோ மத்யூஸ், லசித் மலிங்க ஆகியோர் புதிய உலகசாதனை ஒன்றைப் படைத்துள்ளனர்.

மெல்பர்னில் நேற்று நடைபெற்ற அவுஸ்திரேலிய அணியுடனான போட்டியில் 240 ஓட்டங்களை நோக்கி இலங்கையணி துடுப்பெடுத்தாடிய போது 9தாவது விக்கெட்டுக்காக ஜோடி சேர்ந்த இவ்விருவரும் 132 ஓட்டங்களைக் குவித்தனர். இது ஒருநாள் சர்வதேசப் போட்டியில் புதிய உலக சாதனையாகும்.

27 வருடங்களுக்கு முன்னர் 1983 ஆம் ஆண்டு உலகக்கிண்ணப் போட்டிகளின் போது சிம்பாவே அணிக்கு எதிராக இந்திய அணிவீரர்களான கபில் தேப்–சயீட் கிர்மானி ஆகியோர் 126 ஓட்டங்களைப் பெற்றமையே இதற்கு முன் 9தாவது விக்கெட்டுக்கான உலக சாதனையாக இருந்தது.

இச் சாதனையை நேற்று மத்யூஸும் மலிங்கவும் முறியடித்தனர். இவர்கள் ஜோடி சேர ஆரம்பித்தபோது இலங்கையணி 107 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் 8 விக்கெட்டுக்களையிழந்து இக்கட்டான நிலையிலிருந்தது. எனினும் இறுதியில் இலங்கையணி ஒரு விக்கெட்டினால் வெற்றிபெற்றது.

# முதலாவது டெஸ்டில் இன்று

# இந்தியா-நியூசிலாந்து மோதல்

## டெண்டுல்கர் 50-வது சதமடிப்பாரா?

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்துக் கிரிக்கெட் அணி 3 டெஸ்ட் மற்றும் 5 ஒருநாள் போட்டிகளில் விளையாடுகின்றது.

இந்திய–நியூசிலாந்து அணிகள் மோதும் முதல் டெஸ்ட் போட்டி குஜராத்தில் உள்ள அகமதாபாத்தில் இன்று (வியாழக்கிழமை) தொடங்குகிறது. இதற்கு இரு அணி வீரர்களும் தீவிர பயிற்சி பெற்று வருகின்றனர்.

இந்திய அணி சமீபத்தில் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை 2:0 என்ற கணக்கில் கைப்பற்றியது. இந்நிலையில் நியூசிலாந்துக்கு எதிரான தொடரையும் இந்தியா கைப்பற்றும் என்று ஆவலுடன் எதிர்பார்க்கப் படுகிறது.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டா



வது டெஸ்டில் விளையாடாத காம்பீர் அணிக்குத் திரும்பியிருக்கிறார். சேவாக்குடன் இணைந்து அவர் தொடக்க வீரராக களம் இறங்குவார். இதன் காரணமாக பெங்களூர் டெஸ்ட்டில் சதம் அடித்த தமிழக வீரர் விஜய்க்கு வாய்ப்புக் கிடைப்பது கடினம்.

இதேபோல்வி.வி.எஸ். லக்ஸ்மன் இடம்பெறுவதால் புஜராவுக்கு வாய்ப்புக் கிடையாது.

வேகப்பந்து வீரர்களில் இஷாந்த் சர்மா, ஸ்ரீசாந் ஆகியோரில் ஒருவருக்குத்தான் வாய்ப்புக் கிடைக்கும்.

இந்த டெஸ்ட்டில் டெண்டுல்கர் புதிய சாதனை படைப்பாரா? என்று ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகிறது. அவர் தனது 50–வது சதத்தைப் பூர்த்திசெய்யும் ஆவலில் உள்ளார்.

நியூசிலாந்துஅணியில் ரோஸ் ரெய்லர், ரைடர், குப்தில், மக்குலம், போன்ற சிறந்த துடுப்பாட்ட வீரர்களும் அணித்தலைவர் விக்டோரி, மார்ட்டின், செவுத்தி போன்ற சிறந்த பந்துவீச்சாளர்களும் உள்ளனர்.

அந்த அணி சமீபத்தில் பங்களாதேஷிடம் தோற்றிருந்ததால் நெருக்கடியிலுள்ளது.

இந்தப் போட்டி இன்று காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகிறது.

# பாடசாலைகளின் அபிவிருத்தி தொடர்பில் கருத்துப் பரிமாற்றத்துக்கு அழைப்பு

(திருகோணமலை)

மகிந்த சிந்தனையின் ஆயிரம் பாடசாலைத் திட்டத்தில், வடக்கு மாகாணத்தில் அபிவிருத்திசெய்யப்படவுள்ள 110 பாடசாலைகள் தொடர்பில் கருத்துப்பரிமாறுவதற்கு மதத்தலைவர்கள், அரசியற் தலைவர்கள், அதிபர்கள் பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர்களுக்குவட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி அழைப்பு விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் கருத்துப் பரிமாறல் கூட்டம் யாழ்.மாவட்டத் தேர்தல் தொகுதியில் (யாழ்ப்பாணம், கிளிநொச்சி) எதிர்வரும் 9 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரியிலும், வன்னித் தேர்தல் தொகுதியில் (முல்லைத்தீவு, வவுனியா, மன்னார்) எதிர்வரும் 10 ஆம் திகதி வவுனியா தமிழ் மகாவித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளது.

மகிந்த சிந்தனையில் நாட்டில் ஆயிரம் பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு தலா 60 மில்லியன் ரூபாய் நிதியில் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

இத்திட்டத்தில் வடக்கு மாகாணத்தில் 110 பாடசாலைகளை அபிவிருத்திசெய்வதற்கு கல்வி அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது. இந்நிலையில் இத்திட்டத்திற்கான 110 பாடசாலைகளும் தெரிவுசெய்யப்பட்டுள்ள நிலையில் அது தொடர்பில் விளக்கமளிப்பதற்கு வடக்கு மாகாண ஆளுநர் மேற்படி அழைப்பை விடுத்துள்ளார். (ச-5)

## தமிழ்மக்களின் தீர்...

சேர்ந்து ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைத்தால், ஆராய்ந்து உரிய தீர்வினை வழங்குவதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்திய மத்திய அரசிடம் உறுதியளித்ததாக இந்தியத் தூதுவர் தெரிவித்தார்.

இதற்கு பதிலளித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா சம்பந்தன்,

தமிழ்க் கட்சிகள் விரைவில் ஒன்றுகூடி தமிழ் மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்து அதற்கு பொருத்தமான தீர்வுத் திட்டத்தை சமர்ப்பிப்போம். இந்தியாவின் ஆதரவினை தமிழ்க் கட்சிகள் எதிர்பார்க்கின்றன.

தமிழர்களின் கோரிக்கைகளுக்கான தீர்வுத் திட்டத்தினை முன்வைக்கும் போது அது தொடர்பாக இலங்கை அரசுக்கு இந்தியா தனது கடுமையான அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டும் என வலியுறுத்தினார். (ச-7)

## தே.சு.முன்னணியின்...

மோட்டார் சைக்கிளில் வந்த இனந் தெரியாதநபர்களினாலேயே தீக்கிரையாக்கப்பட்டதாக ஏறாவூர் பொலிஸில் புகாரிடப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக அமைச்சர் விமல் வீரவன்ச கூறுகையில்,

இதுவொரு அரசியல் பழிவாங்கும் சம்பவமாகும். இத்தாக்குதலை யார் செய்தாலும் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்களே.

இச்சம்பவத்தோடு தொடர்புடையவர்கள் யாரென இதுவரை தெரியவில்லை. பொலிஸார் இச்சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்று குறிப்பிட்டார். (ச-5)

## பொன்சேகாவின்...

துள்ளது.

பிரஸ்தாப வழக்கை விசாரிக்கவென மேன்முறையீட்டு நீதிமன்றம் மூன்று நீதிபதிகள் குழாமை நியமித்திருந்தது.

இருவர் கொண்ட நீதிபதிகள் பிரஸ்தாப வழக்கை முன்னர் விசாரித்து வந்த நிலையில் தீர்ப்பு வழங்கப்படும் போது இருவரும் கருத்து முரண்பாடு கொண்டதால் வழக்கு விசாரணை தற்போதைக்கு மூவரடங்கிய நீதிபதிகள் குழாமிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

10ஆம் திகதி வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் போது இரு தரப்பு சட்டத்தரணிகளும் தங்கள் தரப்பு வாதங்களை மீண்டும் முன்வைக்க வேண்டும் என நீதிமன்றம் பணித்துள்ளது. (ச-5)

## தமிழ்க்...

சந் திப்பில் தமிழ் கட்சிகளின் அரங்க பிரதிநிதிகளாக தமிழ் தேசிய விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் எம்.கே.சிவாஜிலிங்கம், புளொட் தலைவர் டி.சித்தார்த்தன் மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எப். பொதுச் செயலாளர் ஸ்ரீதரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-5)

## தமிழ்ச்செல்வனுக்கு...

நடவடிக்கையாக இந்த சிலை விவகாரத்தை கருத முடியாது.

இதன்மூலம் புலம்பெயர் தமிழர்கள் மீளவும் பயங்கரவாதத்தை வித்திடுவதற்கான முனைப்புக்களை மேற்கொள்வர்.

குறிப்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேச வலையமைப்பை தகர்ப்பதற்கு அரசாங்கம் வினைத்திறனான முறையில் செயற்பட வேண்டும்.

பயங்கரவாதத்திற்கு எதிரான சகல சக்திகளும் இந்த விடயத்திற்கு எதிராக குரல் கொடுக்க வேண்டியது அவசியமானதென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சிலை விவகாரத்திற்கு இராஜதந்திர ரீதியில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## பல்கலை மாணவர்களின்...

சேதம் விளைவித்ததாகக் குற்றம்சுமத்தப்பட்டு மேற்படி மாணவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இம் மாணவர்களுக்கு பிணை வழங்குவது தொடர்பான மனு நேற்று மேல் நீதிமன்றில் விசாரணைக்கு வந்தபோது மாணவர்களின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி கே.வி.தவராசா 21 மாணவர்களுக்கும் பிணை வழங்கக் கோரி கொழும்பு பிரதம நீதவான் முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்ட மனு கடந்த வெள்ளிக்கிழமை நிராகரிக்கப்பட்டதாகவும் அதையடுத்து திருத்தப்பட்ட மனுவை கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதாகவும் தெரிவித்தார்.

அரச சட்டத்தரணி யொஹான் லியனகே இச்சம்பவம் தொடர்பான அறிக்கையை அடுத்த விசாரணை நடைபெறும் தினத்தில் பொலிஸார் சமர்ப்பிக்கவுள்ளதாகவும் அன்றையதினம் 21 சந்தேகநபர்களையும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய உத்தரவிடுமாறு கோரினார்.

அதையடுத்து மேல் நீதிமன்ற நீதிபதி தீபாலி விஜேசுந்தர அடுத்த விசாரணையை நவம்பர் 8 ஆம் திகதிக்கு ஒத்திவைத்ததுடன் அன்றையதினம் சந்தேகநபர்களை நீதிமன்றில் ஆஜர் செய்யுமாறு சிறைச்சாலை அத்தியட்சகருக்கு உத்தரவிட்டார். (ச-5)

## திருமலை ஆயர்...

பேராயர்கிங்ஸ்லிசுவாம்பிள்ளை தெரிவித்தார்.

ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது,

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளவர்களில் நேரடியாக தொடர்புபடாதவர்களை விடுதலை செய்யவேண்டும்.

விடுதலைப் புலிகளுடன் தொடர்புபட்டவர்கள் என கைது செய்யப்பட்டுள்ள மலையக இளைஞர்கள் தாங்கள் இவ்வியக்கத்தில் தொடர்பில்லை என்பதை நிரூபிக்க சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்.

யுத்தத்தால் உயிரிழந்த பலருக்கு இதுவரை மரணச் சான்றிதழ் வழங்கப்படவில்லை. இதனால் அவர்களுக்கு எந்த ஆதாரமும் இல்லாமல் உள்ளது. மரணச் சான்றிதழ் வழங்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். (ச-5)

## தமிழர்களின் பிரச்சினை...

நாயக மக்கள் முன்னணி, மனித உரிமைகள் இல்லம், புளொட் அமைப்பு ஆகிய 9 தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

இக் கூட்டத்தில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியினர் கலந்து கொள்ளவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

இருப்பினும் தமிழ் அரங்கக் கட்சிகள் கூடி எடுக்கப்படுகின்ற முடிபுக்கு தமது ஆதரவினை வழங்குவதாக அக்கட்சி தெரிவித்துள்ளது.

தமிழ் மக்களின் மீள்குடியேற்றம், காணிப்பிரச்சினைகள், உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக ஆராயப்பட்டு இது தொடர்பாக தீர்மானங்கள் எடுக்கப்பட்டு, இத்தீர்மானங்களை மகஜர் வடிவில் ஜனாதிபதி பதிக்கு அனுப்ப தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மலையக தமிழ் கட்சிகளை ஒன்றிணைத்து தமிழ் மக்களின் இனப்பிரச்சினை தொடர்பாக கலந்துரையாடி இறு[illegible]டிபுகளை எதிர்வரும் நவம்பர் மாதம் 13, 14ஆம் திகதிகளில் மீண்டு தமிழ் அரங்கக் கட்சிகள் கூடி எடுக்கப்படும்.

இறுதித் தீர்மானம் தொடர்பாக ஆராய்ந்து மகஜரை ஜனாதிபதியிடம் கையளிக்கவுள்ளதாக தமிழ் தேசிய விடுதலைக் கூட்டணியின் தலைவர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார். (ச-7)

## பயங்கரவாத தடைச்சட்...

அங்குத் தொடர்ந்து சாட்சியம் அளித்த அவர்,

இச்சட்டங்களின் மூலம் மக்கள் கைது செய்வது முற்றாக தடுக்கப்படவேண்டும். அத்துடன் ஏனையோரின் கருத்துக்களையும் புரிந்து கொள்ளும் வகையில் நாட்டிலுள்ள அனைத்து பாடசாலைகளிலும் மும்மொழிக் கல்வியை அறிமுகப்படுத்தவேண்டும்.

தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய இரு மொழிகளையும் அரச கரும மொழியாகவும் தேசிய மொழியாகவும் அமுல்படுத்தல்.

அரசாங்கத்தின் மறைமுக அனுமதியோடு மேற்கொள்ளப்படும் குடியேற்றங்களை நிறுத்தவேண்டும்.

பல்லின மக்களும் வாழுகின்ற எமது நாட்டில் தனிச் சிங்கள மொழிச் சட்டமே சிங்கள ஆதிக்கத்தை வலுப்பெற செய்தது.

நாட்டில் பல் வகையான இன மக்கள் வாழுகின்றனர். ஆனால்சிங்களமே நாட்டின் பெரும்பான்மையென்ற துரதிர்ஷ்டமான இன வளர்ச்சிக்கு 1956ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட தனிச்சிங்கள மொழிச்சட்டம் வித்திட்டுள்ளது.

சுதந்திரத்திற்குப்பின் கொண்டுவரப்பட்ட பெரும்பான்மை ஜனநாயகமானது பெரும்பான்மை மக்களுக்கு வாய்ப்புகள் வழங்கப்பட்டதால் சிறுபான்மை இன மக்கள் மீண்டெழுவதற்கு சந்தர்ப்பங்கள் இல்லாமல் போனது. இதனால் இலங்கை பல்லின மக்கள் வாழும் நாடு என்ற உண்மையினை இழந்துவிட்டது.

நாட்டின் அரசியலமைப்பில் பிரதான மொழியாக சிங்கள மொழி கொண்டுவரப்பட்டமையினால் நாட்டிலுள்ள பல்வேறு இனங்களுக்கிடையில் பதற்ற நிலைமைகளை ஏற்படுத்தியது.

1972,1978ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட சோல்பரி அரசியல் அமைப்பின் 25-வது பந்தியில் வழங்கப்பட்ட சிறுபான்மையினரின் பாதுகாப்பை தவிர்த்துக்கொண்டது.

இதன் காரணமாக அரசியலில் பிரவேசித்த பெரும்பான்மையின தலைவர்கள் தமது அரசியல் நோக்கத்துக்காக மேற்கொண்ட நடவடிக்கைகள் 1983ஆம் ஆண்டு இனக் கலவரத்தை ஏற்படுத்தியது.

இதேபோன்ற காலாவதியான துன்பகரமான நிலைமைகள் மீண்டும் ஏற்படாமல் தடுப்பதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார். ([illegible]-7)


**கோழிக் குஞ்சு விநியோகம்**

தரமான நம்பர் 01 கோழிக்குஞ்சு விநியோகிக்கப்படும். முற்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்.

➢ சங்கீத் களஞ்சியம் பொன்னாலை வீதி, மானிப்பாய்.
➢ லக்ஷ்மி ஸ்ரோர்ஸ் மானிப்பாய்வீதி, ஆறுகால்மட[illegible].
➢ கிருஷ்ணா ஸ்ரோர்ஸ் குளப்பிட்டி சந்தி, கே.கே.எஸ்.வீதி.

தொடர்புகளுக்கு: 0754985843

**தரம் 5 மாணவர்களுக்கு**
**2011 விஸ்வரூப வரவு**
**வெற்றிச் சிகரம்**

திருகோணமலை
**எஸ்.கணேசலிங்கம்**
(முன்னாள் வெற்றித்தேர்வு ஆசிரியர்)

மாணவர்களின் அடைவு மட்டத்தை தேர்ச்சி இலக்காக மையப்படுத்தி இவ்வினாப்பத்திரம் தொடர்ச்சியாக 2011 ஓகஸ்ட்வரை வெளிவரும்.

தரம் 4 மாணவர்களுக்கு 5 இதழ்கள் டிசம்பர்வரை வெளிவரும்!

அன்னை புத்தகசாலை - யாழ்ப்பாணம், சாவகச்சேரி
துர்க்கா புத்தகசாலை - சுன்னாகம்
மொடேன் ஸ்ரோர்ஸ் - நெல்லியடி
கிளிநொச்சியில் - அறிவுநதி புத்தகசாலை

விலை 20 ரூபா

பாடசாலை, கல்வி நிறுவனங்களுக்கு விஷேட கழிவு
வெளியீடு - யுனிலங்காஸ் கொழும்பு - 0776258778

**STUDY IN UK**

IELTS அவசியமில்லை

யாழ்.நகரில் மிகக் குறைந்த செலவில் உங்கள் கனவுகளை நனவாக்கிட உங்கள் நம்பிக்கையான நண்பன்.

JANUARY ADMISSONக்கான இறுதிவாய்ப்பு

❁ கல்லூரிக் கட்டணம் அதிகூடிய தொகை 2000 பவுண்ஸ் மட்டுமே.
❁ மிகக்குறைந்த செலவில் Sponsor வசதிகள்.
❁ பிரபலமான சட்டத்தரணிகளின் வழிகாட்டல் உதவியுடன்
❁ குடும்பமாக கல்வி பயிலக்கூடிய வாய்ப்புகள்
❁ லண்டனில் உயர்தரப் பல்கலைக் கழகங்கள் /கல்லூரிகளில் அனுமதி
❁ Visa வுக்கான 100% உத்தரவாதம்
❁ மிகக்குறுகிய காலத்தில் பயணம் செய்யலாம்.
❁ Interview இன்றி 3 நாட்களில் கல்லூரி அனுமதிகள்.

தொடர்பு: 0770871616

அலுவலக விலாசம்
245, பலாலி வீதி, கந்தர்மடம்.
(Baby Photo அருகாமை)

அலுவலக நேரங்கள்
திங்கள் - சனி வரை
காலை 9.00-பி.ப.3.30

(2799)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.11.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.